31

பொன்னி

PONNI 10·9·51

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - OCT 1951
MADRAS

புத்தக வேலைகள், பத்திரிகை வேலைகள்,
அழகிய மூவர்ண மேலட்டைகள்
அனைத்தும் அச்சிட்டுத் தருகிறோம்.

★

உயர்தர அச்சு வேலைகளுக்கு
எங்களைக் கலந்தாலோசியுங்கள்

★

பொன்னி அச்சகம்

16, சேனியம்மன் கோயில் தெரு,
தண்டையார்ப்பேட்டை :: சென்னை—21

செப்டம்பர் 14 முதல்
சர்வாதிகாரி
மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு
வசனம்: ஆசைத்தம்பி
டைரக்ஷன்: T.R. சுந்தரம்

List of 1st Prize winners of C. No. 57. (1) M. Bhujjammah, Bezwada. (2) K. S. Thakur, Raigarh. (3) K. P. Mahajan, W. Kandesh. (4) C. Pillai, Vaikam. (5) K V. Ramanavya, Jeypore. (6) M. Meenakshi, Salem (7) P. A Swamy, Vaniyambadi. In addition 7 persons are awarded 3rd Prize and 4 5th Prize

Full particulars are published in the Rainbow dated 10—9—51

ரிஜிஸ்டர் நெ 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ 59

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 57 *79 to 94 =346

92	85	89	80
79	90	86	91
82	87	83	94
93	84	88	81

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 57 on 6.8.51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 27/8/51

Agent Madras

முடிவு தேதி 27—9—51 விடை 13—10—51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-ககு ரூ. 5-0-0

354

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 81 முதல் 96 வரையுள்ள எணகளைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 354 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வருவுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. **59**

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | செப்டம்பர் 10, 1951 | இதழ் 13

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆவணித் திங்கள் 25-ம் நாள்

உண்மையான இன்பம்	....	இராசகோபாலாச்சாரியார்	3
ஜப்பான் சுயம்வரம்	....	கார்ட்டூன்	4
பொம்மை ஜப்பான	....	தலையங்கம்	5
காலமும் கருத்தும்	....		7
யாருக்கு உங்கள் வாக்கு	....	கடிதங்கள்	11
இழப்பேனா என் தமிழை?	....	வீர. மெய்யப்பன்	17
ஆடும் மாடும்	....	டி. கே. சீனிவாசன்	19
சண்டை முடிந்தது	....	டி. ஜே. இன்பராஜ்	25
குழந்தை கிடைத்தது	....	சுலோசனா	28
நமக்குள்ளே	...	சுகி	36
வைராக்கியம்	....	எஸ். நடராசன்	43
பாகவதர் படுத்தும் பாடு	....	குருவி	0
விளக்குக் குறி	....	எம். கே. கோமேதகவேலு	53
ஜூனியர் மாபஸான்கள்	...	நாஞ	60

உண்மையான இன்பம்

அறிவு வளர்ச்சியைக் கல்வியின் நோக்கமாகக் கருதுவதுண்டு. அத்துடன் நல்லொழுக்கத்தையும் திறமையையும் முக்கியமான லட்சியமாகக் கொள்ளும்படி யோசனை கூறுவேன். கிராமங்களில் உழவு வேலை செய்யும் குடியானவர்களைப் போலும் கைத்திறன் படைத்த மற்ற தொழிலாளர்களைப் போலும் உங்களுடைய கைகளை உபயோகித்துத் திறமையாக வேலை செய்ய முடியாவிட்டால் அது குறித்து ஒரு கல்லூரி மாணவன் வெட்கப்படவேண்டும். உடல் உழைப்பிலும் கைத்திறனிலும் அதிகக் கவனம் செலுத்துவது அவசியம். உடல் உழைப்பு சம்பந்தமான வேலைகளில் நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். உடல் உழைப்பினால்தான் மனிதருக்கு உண்மையான இன்பம் ஏற்படுகிறது. உங்களுடைய சொந்த வேலைகளுக்குப் பிறரின் உடல் உழைப்பை எதிர்பார்க்கக் கூடாது.

[கனம் ஆச்சாரியார் காஷ்மீர் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் இவ்வாறு குறிப்பிட்டார்]

ஜப்பான் சுயம்வரம்

பொம்மை ஜப்பான்

ஜப்பான் நாட்டிலிருந்து வரும் பொம்மைகள் நம் குழந்தைகள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமைவதோடு, ஜப்பானியரின் வேலைத்திறனை நமக்கு எடுத்துவிளக்கும் அரும்பொருள்களாயும் விளங்கும். அண்மையில் சென்னைநகர மேயருக்கு 'முரசு கொட்டும் பெண்' பொம்மையொன்று ஜப்பானியரால் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாகப் பொம்மைகளைப் படைப்பதில் வல்லவர்களான ஜப்பானியர்கள், இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர், அமெரிக்காவின் கைப்பொம்மையாகத் தங்கள் நாட்டை அடக்கியொடுக்கிக் கொண்டதுதான் விந்தையிலும் விந்தை! அந்த விந்தை பலமடங்கு பெருகுகிறது, நமக்கு இப்போது வரும் செய்திகளைப் பார்க்கும்போது.

சான்பிரான்ஸிஸ்கோவில் ஜப்பானிய சமாதான ஒப்பந்த மாநாடு நடைபெறுகிறது. அம்மாநாட்டில் அமெரிக்கா-பி[illegible]டன் கூட்டுச் சரக்கான ஜப்பான் ஒப்பந்தம் கைவெழுத்தி[illegible]டுவது திண்ணம். ஐம்பது நாடுகள் அம்மாநாட்டில் கலந்துகொ[illegible]ண்டிருக்கின்றன; ரஷ்யா கூடக் கலந்துகொண்டிருக்கிறது! அங்கே நிறைவேறப் போகும் உடன்படிக்கையை ரஷ்யா எதிர்க்கிறது! கம்யூனிஸ்ட் சீனா அம்மாநாட்டுக்கு அழைக்கப்படவே இல்லை. பர்மா மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இந்தியா தன் மறுப்புகளை வெளியிட்டிருப்பதோடு, மாநாட்டில் கலந்துகொள்ளவும் மறுத்துவிட்டது. இந்தோனேஷ்யா தன் ஆட்சேபங்களைத் தெரிவித்திருக்கிறது. இந்த அலங்கோலத்தில் நிறைவேற இருக்கும் சமாதான ஒப்பந்தத்தை, ஜப்பான் பிரதமர் யோஷிடா வரவேற்கிறார் என்றால், அவர் அமெரிக்காவுக்குச் சரியான 'தலையாட்டிப் பொம்மையாக' இருக்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்! இந்த விநோதங்களோடு நிறைவேறவிருக்கும் சான்பிரான்ஸிஸ்கோ உடன்படிக்கை ஜப்பானுக்கு என்ன ஆதரவுகளை வழங்குகிறது என்று பார்த்தால் ஒரே வேடிக்கைதான்!

ஜப்பானில் அமெரிக்கப் படை தங்குவதற்கு உடன்படிக்கை இடமளிக்கிறது; ஜப்பானுக்குச் சொந்தமான சில தீவுகளை

அமெரிக்கா தம் தர்மகர்த்தா ஆட்சியில் வைத்துக்கொள்ளப் போகிறது. பார்மோஸா தீவைப்பற்றி ஒரு வரிகூட அந்த ஒப்பந்தத்தில் இல்லை. ஜப்பானுக்கு அண்டை நாடுகளான ரஷ்யா, சீனா சம்பந்தப்படாத இந்த ஒப்பந்தம் என்ன சாதித்துவிடப் போகிறதென்றுதான் நமக்குப் புரியவில்லை.

ஆனால், அமெரிக்கா தனக்கேயுரிய வேகத்தில் எந்தத் தடையையும் நீக்கி, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றப் போவது நிச்சயம். நிறைவேற்றிய பிறகு ஒப்பந்தம் என்ன விளைவுகளை உண்டாக்குமென்று அமெரிக்கா இப்போது யோசிக்க மறுக்கிறது. 'ரஷ்யப் பூச்சாண்டி'யைக் காட்டி அர்த்தமில்லாத காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்வதே அமெரிக்காவுக்கு இப்போதெல்லாம் சர்வசாதாரணமாகிவிட்டது. இந்தப் போக்கு மாற வேண்டும்.

அமெரிக்கா வளர்த்த 'செல்லப்பிள்ளைகள்' கதியை இச்சமயத்தில் நினைவுபடுத்திப் பார்ப்பது அவசியம். சியாங்-கே-ஷேக் சைனா அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக விளங்கிற்று. அமெரிக்க உதவியால் சைனா செழிப்படைந்தது என்று யாரும் சொல்லமாட்டார்கள்; சீரழிந்தது என்றுதான் சரித்திரம் கூறுகிறது. தென்கொரியா அமெரிக்க மேற்பார்வையில் கண்ட 'முன்னேற்றத்தை'க் கொரியாவில் நடந்த போர் உலகுக்கு வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது. வடகொரியருக்கும் தென்கொரியருக்குமுள்ள வேற்றுமை, மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமையாக அல்லவா காட்சியளித்தது! இவ்வாறு தென்கொரியரை உதவாக்கரையாக்கியது அமெரிக்க நிர்வாகம். இப்பொழுது ஜப்பான்மீது கருணை பொங்கி வழிகிறது, அமெரிக்கருக்கு! இந்தக் கருணை ஜப்பானியரை எந்தக் கதியில் தள்ளுமோ என்றுதான் உலகம் கவலைப்படுகிறது. அமெரிக்கா சரித்திரப் போக்கை உணர்ந்து, ஜப்பான் சம சுதந்திர நிலை அடைய வழி செய்வதுதான் சிறந்தது! அதை விடுத்து, மற்ற பொம்மலாட்டங்களில் கவலை செலுத்துவதும், காரியமாற்றுவதும் நிலைத்த பயனைத் தராது என்பது திண்ணம். இந்தியாவின் எச்சரிக்கை இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. ஜப்பானைப் பொம்மையாக வைத்திருக்கும் வரை சான்பிரான்ஸிஸ்கோ ஒப்பந்தம் சாத்தியம்தான்! யோஷிடா பேச்சைத் தலைமுறை தலைமுறையாக வரும் ஜப்பானியர்கள் போற்றி நடப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? பிற்காலத்தில் செல்வாக்கற்றுப் போகவிருக்கும் ஒரு ஒப்பந்தத்தை வீறாப்புக்காக நிறைவேற்றிவிட அமெரிக்கா ஏன் துடிக்கவேண்டும்? அமெரிக்கா விரும்புவதாகக் கூறும் உலக அமைதிக்கு இது வழியல்ல என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

காலமும் கருத்தும்

வ. ரா. மறைந்தார்

சென்ற ஆகஸ்ட் இருபத்து மூன்றாம்நாள் எழுத்தாளர் வ. ரா. மறைந்தார்; அறுபத்திரண்டு ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்த அவர், தமிழர் நினைத்து மகிழும்படியாகப் பல செயல்களைத் தம் வாழ்நாளில் முடித்திருக்கிறார். பாரதியாரோடு நெருங்கிப் பழகிய அவர், தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரிய அடிப்படையை அமைத்தார் என்பது ஒருபுறமிருக்க, அவர் தம் புரட்சிப் போக்கைத்தான் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்தெழுந்த வீரவுணர்வு, சமுதாயத்தைச் சூழ்ந்திருக்கும் நச்சரவங்களின் மீதும் பாய்ந்ததில் வியப்பில்லை! என்றாலும் தேசியமும் வைதீகமும் கைகோர்த்துச் செல்வதே நம் நாட்டு நடைமுறையாக இருந்தபோது, வ. ரா. குருட்டு நம்பிக்கைகளைச் சாடிய முறையும், பழைய சாத்திர சம்பிரதாயங்களில் மக்களுக்கிருந்த பிடிப்பைத் துண்டிக்க முயன்ற அவர் தம் துணிவும், விபீஷணரை ஆழ்வாராகப் போற்றியவர்களிடையே துரோகிகள் மலிந்துவிட்டதில் ஆச்சரியமில்லை என்ற கருத்துப்பட அவர் செங்குமாட்டுப் போக்கைக் குத்திக்காட்டிய பான்மையும் பலரை வியப்பில் வைத்தன என்றால் மிகையல்ல. 'கோதைத் தீவு' அவர் குறிக்கோளைத் திரட்டித் தருகிறது; ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலும் அந்தப் புத்தகத்தைத் 'திருக்குறள்' போல் போற்றிப் படிக்கவேண்டும். அத்துணை சிறப்புடையது அந்நூல். வ. ரா. வின் நூல்களெல்லாம் அவருடைய துணிச்சலையும், எல்லோரிடமிருந்தும் பிரிந்து தனித்து நிற்கும் பண்பையுமே விளக்குகின்றன. இத்தகைய சிறந்த எழுத்தாளர், தான் நினைத்த குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமென ஆவேசத்தோடு துடித்த எழுத்தாளர் மறைவு தமிழகத்திற்குத் துயரம் தரும் செய்திதான்! எழுத்தாளர்கள், வ. ரா. வின் துணிவுமிக்க பாதையைப் பின்பற்றுவதுதான் அந்த 'அதிசயப் பிறவி'யின் மறைவை ஈடுசெய்ய நல்ல வழி. எழுத்தாளர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

ஆந்திர மாகாணம்

ஆந்திர மாகாணம் பெறுவதற்காகச் 'சுவாமி சீதாராம்' என்பவர் குண்டூரில் தம் குழுவினரோடு உண்ணாவிரதமிருந்து வருகிறார். அவருக்கு ராஷ்டிரபதி ராஜன் பாபு கடிதம் எழுதினார்; பிரதமர் நேரு சமாதானம் கூறி மடல் அனுப்பித்தார்; சென்னை முதலமைச்சர் கண்டு பேசினார்;

கடிதத்தின் மேல் கடிதம் வரைந்தார்! இத்தனை அமர்க்களத்திற்குப் பிறகும் 'சுவாமி'யின் உண்ணாவிரதம் மகத்தான மூன்றுவது வாரம், நான்காவது வாரம் என்று நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கிறது. நேரு 'உங்களுக்குள் சமாதானம் செய்துகொள்ளுங்கள்; பிறகு எங்களிடம் வாருங்கள்' என்ற மாதிரியில் கூறிவிட்டார். உள்நாட்டு அமைச்சர் ஆச்சாரியாரோ இன்னும் தெளிவாக 'மாகாணம் அமைக்க மொழி ஒன்றுமட்டும் முக்கியமென்று யாரும் கருதவேண்டாம்; மொழியைக் கருதித் திருவாங்கூரையும் கொச்சியையும் இணைத்ததில் கண்ட பலன் நமக்கு எச்சரிக்கையாக இருக்கிறது; பூகோள அமைப்பு, பொருளாதாரம், நிர்வாக வசதி இவை மொழியைவிட முதன்மையாகக் கவனிக்கப்பட வேண்டியவை' என்று மொழிவாரி மாகாணக் கோரிக்கைக்கே முற்றுப் புள்ளி வைக்கும் மாதிரியில் பார்லிமெண்டில் பேசியிருக்கிறார்! இந்நிலையில் 'சுவாமி'யின் உண்ணாவிரதம் எப்படி முடியப் போகிறதோ தெரியவில்லை! ஆனால் காங்கிரஸ் சர்க்கார் மொழிவாரிப் பிரிவினைக்குத் தயாராக இல்லை என்பது ஆபத்தான நிலை. மொழிவாரி மாகாண அமைப்பு, காங்கிரஸால் உறுதி கூறப்பட்ட சீர்திருத்தமென்று பல காங்கிரஸ்காரர்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றனர். அவர்கட்கு ஆச்சாரியார், சங்கராச்சாரியார் கூற்றொன்றை எடுத்து வீசியிருக்கிறார். "மறந்துவிடுவது மகிழ்ச்சிக்கு உதவுகிறது; ஞாபகம் துன்பத்துக்குத்தான் இடந்தருகிறது" இதுதான் அந்தப் பொன்மொழி: காங்கிரஸ்காரர்கள் முன்கூறிய வாக்குறுதிகளை ஞாபகப்படுத்துவதில்தான் எவ்வளவு தொல்லைகள்! மக்கள் அவற்றை மறந்துவிட்டால் அவர்களுக்கு எத்தனை வசதியாயிருக்கும்!

மாநில மாநாடு

சென்னையில் தி. மு. க. மாநில மாநாடு இம்மாதக் கடைசியில் நடைபெற இருப்பதாக அறிகிறோம்; நான்கு நாட்கள் மாநாடு நடைபெறுமென்றும், தோழர் கே. ஆர். இராமசாமி குழுவினர் 'சாக்ரடீஸ்' 'சந்திரோதயம்' 'ஜமீன் மாளிகை' முதலிய புதிய நாடகங்களை மாநாட்டில் நடத்த ஏற்பாடுசெய்து வருகின்றன ரென்றும் தெரிகிறது. தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளிலே தி. மு. கழகம் நல்ல செல்வாக்குப்பெற்று விளங்குகிறது. தோன்றிய இரண்டு ஆண்டு காலத்திற்குள் இந்த அளவு எந்தக் கட்சியும் வளர்ந்ததில்லை. முற்போக்கு எண்ணங்களின் மன்றமாக, தமிழ்மக்களின் கருத்தோவியமாக தி. மு. கழகம் விளங்குகிறது. முதல் மாநில மாநாடு சென்னையில், விரிவான ஏற்பாடுகளுடன் நடைபெறுகிறதெனில் அங்கே கட்சியின் ஆக்கம் பற்றிப் புதுத் திட்டங்களும், நாட்டு நிலை குறித்துத் தக்க முடிவுகளும்

உருவாவது இயற்கை. எனவே சென்னை மாநாடு தமிழகம் ஆவலுடன் எதிர்பார்க்கும் இன்ப நிகழ்ச்சியாக விளங்குவதில் வியப்பில்லை; அந்த ஆவலும் ஆர்வமும் மாநாட்டைப் பெரு வெற்றியாக்கும் என்று கூற வேண்டியதில்லை.

கோதுமை வாபஸ்

சில தென் ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்ட கோதுமை செலவாகாதபடியால் சென்னைக்குத் திரும்ப அனுப்பப்படுகிறது என்று சென்ற வாரம் ஒரு செய்தி வந்தது. இந்த வேடிக்கை எதிர்பார்த்ததுதான்! 'கோதுமையாகத் தருவதானால் பதினாறு அவுன்ஸ் தருவேன்' என்று கனம் குமாரசாமி ராஜா கூறுகிறாரென்றால், கோதுமையை இங்கே யாரும் சீண்ட மாட்டார்கள் என்ற தைரியம் தானே! ஜில்லாக்களிலிருந்து சென்னைக்கு வாபஸ்! சென்னையிலிருந்து பம்பாய்க்கு வாபஸ்! பம்பாயிலிருந்து அமெரிக்காவுக்கு வாபஸ்! இப்படிக் கோதுமை வாபஸ் படலம் வளருமானால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! அமெரிக்காவிலிருக்கும் பன்றிகள் இந்தியாவிலிருந்து வாபஸாகிவரும் கோதுமையைத் தின்று இங்கேயுள்ள 'மனிதர்'கட்குப் புத்தி கற்பிக்க அரிய சந்தர்ப்பம் ஏற்படுமல்லவா? கனம் முன்ஷி உணவு மந்திரியாக வீற்றிருக்கும் வரை நமக்கு இத்தகைய செய்திகட்குப் பஞ்சமே இராது! அரிசிக்குத்தான் பஞ்சமாயிருக்கும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் பெண்களாலேயே நடிக்கப்படுவதற்காகத் திராவிடப் பெண்மணியால் இயற்றப்பட்ட தமிழ் நாடகம்

போராட்டம்

ஆசிரியர்:
செல்வி அருண்மொழி B. O. L.

ஆலை முதலாளி அருணாசலத்தேவர் அடக்குமுறை, சலீம் - நங்கை காதல், நீதி மன்றத்தின் சட்டக் குழறுபடி ஆகியவற்றைச் சித்திரிக்கும் ஓவியம்.

★

விலை 8 அணா

★

விவரங்கட்கு:

அலமேலு நிலையம்
13, அருணாசல ஆச்சாரி தெரு,
சென்னை – 5

குறிப்பு: மாநாட்டுப் பந்தலில் புத்தகம் விற்பனைக்குக் கிடைக்கும்.

விருந்து இலக்கிய வரிசை

2

ஆலிவர் கோல்டுஸ்மித் எழுதிய ஆங்கில நாடகம்

மாமனர் வீடு

செப்டம்பர் 15ல் எங்கும் விற்பனைக்குக் கிடைக்கும்.

தனிப்பிரதி அணு 8

12 புத்தகங்கள் தொடர்ந்து

அனுப்பக் கட்டணம் ரூ. 6/—

பொன்னி லிமிடெட் — சென்னை-21

மூன்றாவது புத்தகம் :

யாமதா ககாஷி வரைந்த ஜப்பானியக் கதை

துன்பக் கேணி

யாருக்கு உங்கள் வாக்கு?



***இல்லாமையால் இடருற்று வாடிடும் எண்ணற்ற ஏழைகளின் இரத்தக் கண்ணீர், துப்பாக்கி முனைக்கஞ்சித் துடிப்படக்கி வாழ்ந்திடும் தொழிலாளர் தம் துயரக்குரல், நேர்மையற்ற நிர்வாகத்தில் அவதியுறும் அதிகாரிகளின் அச்ச ஒலி, அறியாமை ஆட்சி கண்டு ஓடுகின்ற அறிஞர் உள்ளம்... இத்தனையும் கூறும் 'சோக வாலாறு' நாட்டின் எத்திசையிலும் எதிரொலிக்கிறது! இந்த எதிரொலிக்கிடையில் சராசரி அறிவுள்ள எவரும் நான்காண்டு ஆட்சியிலே 'நல்லது செய்தல் ஆற்ற முடியாதது மட்டுமல்ல' அல்லது செய்தல் ஓம்பத் தவறிவிட்டதான காங்கிரசிற்கு மீண்டும் வாக்களிக்கும் எண்ணமாவது கொள்ள முடியுமா? மற்றும் திடீரெனப் புத்துயிர் பெற்றுத் தேர்தல் வானிலே மின்னல் தோற்றம் காட்டிப் பின்னர் எழில் நிலவாக உருவெடுக்க எண்ணி வரும் 'பெரிய மனிதர்கள்' பற்றியும், சரியும் காங்கிரசிலிருந்து 'தற்காப்பி'ற்காக வெளியேறிவிட்டவர்களைப் பற்றியும் மக்கள் அறியாமலா இருக்கிறார்கள்? எனவே, தனித்தியங்கத் தக்க சுதந்திர ஆட்சி அமைக்க, 'கொள்வோரும் கொடுப்போரும் இல்லாமல் எல்லோரும் உழைத்துண்ணவேண்டும்' என்னும் பொருளாதார சமத்துவம் காண 'ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி' என்ற இழிநிலையைத் தகர்த்து 'ஒன்றே குலம்' என்னும் ஆளடிமை இல்லாத உயர்சமூகம் சமைக்க, சுருக்கமாக வறுமையை ஓட்டி, உரிமையை நாட்டிடத் தக்க 'புதியதோர் உலகம் செய்யப்' போராட உறுதியளிக்கும், அளிக்கும் உறுதி வழி செல்லும் ஆற்றல் படைத்த (கட்சிச் சார்பற்றுப் போட்டியிடும்) தனி மனிதருக்கே வரும் பொதுத் தேர்தலில் என் வாக்கு!

ச. புவிஒளியாள்
குடந்தை.

★

அரசியல் சுயம்வர மண்டபத்திலே நான் நிறுத்தப்பட்டிருக்கிறேன். கையில் வாக்கு என்னும் மதிப்புமிக்க மாலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே மன்னாதி மன்னர்கள் கட்டியங் கூறும் கையாட்களுடன் அமர்ந்திருக்கின்றனர். அவ்வளவு

*** ரூபாய் மூன்று பரிசுபெற்ற கடிதம்.

பேரும் என் இதழோரப் புன்ன கைக்குக் காத்துக் கிடக்கின்ற னர். முதலில் யாரோ காமராஜ ராம். 'வீராதி வீரர்! சூராதி சூரர்!' என ஒரு தொங்கு மீசைப் பேர்வழி பாடிக்கொண் டிருக்கிறார்! அடுத்தாற் போல் அந்த நாடகமேடை ராஜா கிருப ளானி பூசுரர்கள் புடைசூழ அமர்ந்திருக்கிறார்! குட்டி ராஜா ஜெயப்பிரகாஷ் நாராயணனும் கூட அமர்ந்திருக்கிறார்! ஜஸ்டிஸ் ராஜன் 'என் பெயரே ராஜன்' என்ற மாதிரியில் தோற்றமளித் துக்கொண்டிருக்கிறார். அடுத் தடுத்து வீற்றிருந்த அத்தனை பேரும் என்னை 'இன்பபுரிக்கு' அழைத்துச் செல்வதாகத்தான் கூறினார்கள். ஆனால் என் ஆசை ராஜா — என் உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைக் கிள்ளிய காதலன்தான் அங்கே வரவே யில்லை! அவர் என்னைக் காதலிக் கிறாராம்; கைபிடிக்கத்தான் விரும்பவில்லையாம். கல்யாணத் துடன் காதல் செத்துவிடுமென எண்ணினார் போலும் அந்த அறிஞர்! ஆனால் கடைசி நேரத் தில் பிருதிவியாய் மாறுவார் என்ற நம்பிக்கை மட்டும் எனக் கிருக்கிறது.

ஜி. முத்துசாமி
ராயகிரி

★

மனிதன் பிணத்தைத் தின்னா மலும், பிண்ணாக்கை விலை பேசாமலும், பருத்திக் கொட் டையை உண்ணாமலும், புளியங் கொட்டையைத் தின்னாமலும், உளுத்தம்பயறுத் தண்ணீரைப் பருகாமலும் இருக்கச் செய்யும் 'கட்சி' — சீர்திருத்த நோக்கங் கொண்டதும், மதத்தை அழிக் கும் எண்ணமுடையதும், கலப்பு மணம் செய்யச் சட்டம் இயற்று வதும், கம்யூனிசத்தைப் பரப் பும் நோக்கங் கொண்டதுமான 'கட்சி' எதுவாயினும் சரி அதற்கே என் வாக்கு!

செ. தாமோதரன்
சென்னை

★

முதலாளிகள், ஜமீன்தார்கள், மிராசுதார்கள் இவர்களின் ஏக போக அதிகாரமே நீடித்து, உழைப்பவர்கள் உழைத்து வாட வேண்டுமென்று நீங்கள் விரும் பினால் அதிகார (காங்கிரஸ்) வர்க் கத்திற்கே உங்கள் உயிரினும் இனிய ஓட்டைப் போடுங்கள். இதைவிட நிலைமை மோசமாகி நாட்டில் குழப்பமும் அராஜகமும் தாண்டவமாடவேண்டும் என்று நினைத்தால் வகுப்பு ஜாதீயக் கட்சி (இந்துமகாசபை) களை ஆதரியுங் கள். நம் தாய்நாடு, ரஷ்ய நாட் டிற்குப் பின்னேடும் கூலியாக இருக்கவேண்டுமென்று கருதி னால் கம்யூனிஸ்ட் கட்சிக்கே வாக்களியுங்கள். ஆனால், இன் றைய நிலைமை அடியோடு மாறி, உழைப்பவர்கள் உரிமையோடு நல்வாழ்வு வாழவும், உலக அரங் கில் பாரத நாடு அமைதிக்கு வழிகாட்டவும் வேண்டுமென்று எண்ணினால் சோஷலிஷ்ட் கட் சியை ஆதரியுங்கள். உங்கள் தொகுதியின் அபேட்சகர் தன்

னலமற்றவர்தாஞ என்று யோசித்து உண்மையான சோஷலிஸ வாதிதாஞ என்று பார்த்து உங்கள் ஓட்டைப் போடுங்கள்.

எம். சங்கையா
வாடிப்பட்டி

★

மக்களாட்சி என்று ஏய்த்து, காட்டு ராஜாக்கள் தர்பார் நடத்தும் இந்த அகிம்சாமூர்த்திகளின் காங்கிரஸ் ஆட்சியிலே, "எங்கள் வாக்கு இவர்களுக்குத்தான்" என்று கூறக்கூட உரிமைதான் இருக்குமா என்பதை எண்ணும்போது விசித்திரமாகக் காட்சி தருகின்றது "யாருக்கு உங்கள் வாக்கு" என்பது! தேனீக்களைப் போன்ற நிகழ்ச்சிகள் நாட்டில் பெருகி வரும் இக்காலத்து வாக்குரிமையும் பலாத்காரமாய்ப் பறிக்கப்படும், தோழரே! இதுதான் "அவர்களது" அந்தியக் காலத்துக் கடைசி ஆயுதம், அணுகுண்டைப் போல! வாக்காளர் உண்மையிலேயே நாட்டுப் பிரிவினை போன்ற நல்லதொரு திட்டமும், எண்ணமும் கொண்டவராயின் தேர்தல்தாஞ வழி? ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிஞல்தான் நாட்டுப் பிரிவினை கிட்டும் என்ருல், பலர் வாழ்வைப் பலி கொள்ளும் தி. மு. கழகம் போன்றதொரு இயக்கம் தேவையில்லையே! வளமார் திராவிடத்தின் விடுதலை இயக்கமாம் தி. மு. கழகத்தின் தொண்டன் நான். அதன் லட்சியம் என் நாட்டின் விடுதலையே தவிர, நாட்டை நலிவுறுத்தும் கொடுங்கோல் வடவாரியர் ஆட்சிக்குட்பட்ட தேர்தல் மோகமல்ல. அவ்வாட்சியின் ஆணைக்கு ஒப்புதல் தந்து தான் பிறந்த பொன்னுட்டைக் காட்டிக் கொடுக்கும் கங்காணிகளில் 'யார் நம்பிக்கையானவன்' 'யார் சரியான ஆள்', 'எது சரியான கட்சி' என்றெல்லாம் தேர்ந்தெடுப்பது வடிகட்டின முட்டாள்தனமாகும். 'நாட்டின் பிரிவினையைப் பெற்றுத் தருகிறேன்' என்பது போன்ற வாக்குறுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பகல் வேடதாரிகளின் நடிப்பை நம்புவது பூனைகள் குரங்கை நம்பியதைப் போலத்தான் ஆகும். ஆகவேதான் என் வாக்கு யாருக்கும் கிடையாது; எனக்கும் இல்லை வாக்களிக்கும் உரிமை!

K. G. சுந்தரமூர்த்தி
சென்னை

★

ஓர் நாட்டைச் சீர்திருத்தி நடத்துவது என்ருல் சுலபமான காரியமல்ல. ஆங்கிலேயன் நாட்டை நம்மிடம் ஒப்புவிக்கும் போது நாடு இருந்த நிலை நாம் அறிந்தது. அதை ஒப்புக்கொண்டு நடத்தி வருகிறது காங்கிரஸ். பல இன்னல்களுக்கிடையில் தேசத்தைக் கூடுமான வகையில் நன்ருக நடத்தி வருகின்றனர். மதுவிலக்கு, ஆலயப் பிரவேசம் முதலிய காரியங்களும் செய்துள்ளனர். காந்தி செய்த காரியங்களுக்காகவாவது நாம் காங்கிரஸை மறக்க முடி

யாது. அதனால் அதற்கே ஓட்டுப் போடவும்.

நாரணன்
திருக்காட்டுப்பள்ளி

★

வானமாரியை நம்பிப் பயிர் செய்து பருவ மழையில்லாது பட்டுக் கருகிப் பலன் கிடைக்காது பட்டினியால் வாடும் பாட்டாளி என்னும் பாடுபடும் உழவன் நான். உழவன் மனம் குளிர ஒதுக்கப்பட்ட ஊர்களுக்கு கருத்தூன்றிக் கால்வாய் வெட்டி வரச் சிரத்தையெடுக்கும் திறமையாளர்களுக்கே எனது வாக்கு.

எம். என். ராஜன்
ஆவணத்தாங்கோட்டை

★

ஓமந்தூரார் போன்றவர்களுக்கு ஓட்டுப் போட்டால் ஏமாந்துவிடமாட்டோம்.

ம. மகாதேவன்
பெங்களூர்

★

தாழ்ந்த தமிழகத்தின் தலையை நிமிர்த்த வல்லவன் எவனோ, தமிழின் பெருமையை உணர்ந்தவன் எவனோ, தமிழே உயர் தனிச் செம்மொழி, செத்த சமஸ்கிருதம் அல்ல என்று முரசறைபவன் எவனோ, தமிழே தன்னிகரில்லாத மொழி என்று உணர்ந்து ஹிந்தியை உதறித் தள்ளுபவன் எவனோ, தமிழர்க்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை, சர்வகலாசாலை முதலியன ஏற்படுத்துபவன் எவனோ, தனி அரசு அளிக்கவல்லவன் எவனோ, தன்னுடைய தன் கையையன்றிப் பிறர் கையை எதிர்பாராத நிலையை ஏற்படுத்த வல்லவன் எவனோ, தியாகத்தன்மை படைத்தவன் எவனோ, ஆட்சி பீடத்தில் அமர்ந்தாலும் தன் னிலையையும், மக்களின் நிலையையும் மறக்காதவன் எவனோ, ஏழை பணக்காரன் என்று பாராமல் உள்ளவன் இல்லாதவன் என்று நோக்காமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று கருதாமல், உழவன், உபாத்தியாயன், வணிகன், கலைஞன், அறிஞன் முதலிய எல்லோருக்கும் நல்வாழ்வு அளிப்பவன் எவனோ, மூட நம்பிக்கைக்கு இடங்கொடாமல் உண்மையை ஆராய்ந்து அறிபவன் எவனோ, லஞ்சம், பொய், புரட்டு, கள்ளமார்க்கெட் முதலியனவற்றிற்கு நாட்டில் இடங்கொடாதவன் எவனோ, மத வேற்றுமைக்கு இடங்கொடாதவன் எவனோ, ஆண், பெண் என்ற வேற்றுமையின்றி நாட்டில் யாவரும் சமமே என்ற நோக்கம் உள்ளவன் எவனோ, ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று வகுக்காதவன் எவனோ, அறிவு எனும் ஒளி நாடு முழுதும் வீசச் செய்பவன் எவனோ அவனுக்கே எனது வாக்கை அளிப்பேன்.

கா. வெங்கடாசலம்
சென்னிமலை

நாட்டிலே நலிவுக்கிருமிகள் மலிந்திருக்கக் காரணம் இல்லாமை, உழையாமை, கல்லாமை என்ற மூன்றும் அரசியலாரின் அலட்சியத்தால், கண்ணியமற்ற முறையால் வளர்ந்ததினுல் தான். இவை வளர்ந்து மக்கள் வாழ்வை வளைய வைக்கின்றன.

துயரக்கேணியும், சஞ்சலச் சுனையும் ஆழமாக, ஊற்றுப் போல வற்ருதிருக்கக் காரணம் உழையாமைதான். உழையாமை மதத்திரையின் பின்னிருந்து கொண்டே மதிப் போடிருக்கிறது. மதத்திரையின் பின்னுள்ள ஊழல், அவலட்சணம், அறியாமை ஆகிய இன்ன பிறவற்றை, அதாவது மதத்திரையைக் கிழித்தெறிய இயலாமல் போகிறது கல்லாமையால். அவை இரண்டும் (உழையாமை, கல்லாமை) சேர்ந்து இல்லாமையை வளர்க்கின்றன.

இவை மூன்றினையும் நாட்டிலே நடமாடாதபடி செய்ய யாருக்கு உளத்திலே மனித மனப்பான்மை இருக்கிறதோ, உண்மை, உழைப்பு மானம் இவற்றின் எதிரொலி தான் மதிப்பு என்று யார் உள்ளபடியே உரைத்து அவற்றை நிலைநிறுத்த முயலுகிருரோ அவருக்கு அளிக்கும் வாக்குத் தான் 'தேர்தல்' என்று பொருள்.

முல்லைநாதன்
சென்னை

★

தேர்தல் நல்லாட்சிச் சின்னங்களில் ஒன்று; நல்ல வழியில் பயன்படுத்தப்படவேண்டும். அதை அறிந்தோர்—திராவிட முன்னேற்றக் கழகத்தார்—பேசுதலும் எழுதுதலுமாக நின்றுவிடாது, 'ஆதரவு எங்கட்குண்டு. ஆனல் தேர்தலில் கலந்து கொள்ளுவோம்' என்றில்லாது அயர்லாந்திலே ஏமன் டிவேலரா ஆரம்ப காலத்திலே போட்டியிடுவோம், ஆதரவைப் பெற்றுக் காட்டுவோம்; ஆனல் சட்டமன்றமேறேம் என்றபடி, தேர்தலில் போட்டியிட்டு வெற்றிநாட்டிச் சட்டமன்ற மறுப்புச் செய்து மக்களிடை அறிவியக்கத்தாராய்ப் பாடுபடல் வேண்டும். அவர்கட்கே மக்கள் ஆதரவு தருவர்; தரவேண்டும்: தரும்படி செய்யவேண்டும்.

'வேதி'
சென்னை

★

நம் கழகம் தேர்தலுக்கு நிற்காத நிலையில், 150 ஆண்டுகள் அடிமை வாழ்விலும் காணுத கொடுமைக்கு ஆளாக்குகின்ற ஆறவுன்சார் தேர்தலுக்கு நிற்கும் நிலையில் நம் வாக்கு, தக்க ஆளில்லையே என்று வீணுக்கப் பட்டால் அதனுல் ஆறவுன் சாருக்குத்தான் லாபம். ஆகவே நடப்புமுறையில் செய்யத் தக்கது ஒன்றே. நம் கழகம் தேர்தலில் பங்குகொள்ளாவிடில் நம் குறிக்கோளில் மிகப் பலவற்றைத் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ள பொதுஉடமைக் கட்சிக்கு வாக்கை வழங்குவது

வரதட்சணை

பீகார் மாகாணத்தைச் சேர்ந்த மிதலா என்ற இடத்தில் நடைபெற்ற கலியாணச் சந்தையில் வரதட்சணை இவ்வருடம் ரூ. 4000லிருந்து ரூ. 10000வரை உயர்ந்ததாம். மைதிலி வகுப்பு வழக்கப்படி ஒரு உயர்தர வகுப்பைச் சேர்ந்த பெண்ணுக்கு மாப்பிள்ளையும் அல்லது ஒரு வயதானவர் இளம் பெண்ணை மணக்க விரும்பினல் அந்த மாப்பிள்ளைக் கிழவரும்தான் பெண் வீட்டார் விரும்பும் வரதட்சணை கொடுக்க வேண்டுமாம்.

தான் ஆறவுன்சாருக்கு அடி வயிற்றில் தீயிடுவது போன்றது. மற்றபடி பழைய கள் — புதிய சட்டி, புதிய கள்—பழைய சட்டி, சரிகைத் தலைப்பாகை முதலியன ஒன்றும் உதவாது.

ரு. பாலகிருஷ்ணன்
கொல்லங்கோடு

★

"அன்னிய ஆட்சி ஒழிந்தும் ஆளவந்தார்களின் ஆளுகையில், பகல் முழுதும் பாடுபட்டும் பாதி வயிற்றுக் கஞ்சிக்கு வாடவும், பள்ளிப்பையன்கள் எள்ளிநகை யாடும் முறையில் கல்விமுறையும், மக்கள் கஞ்சியின்றி வாட மந்திரிகள் கோவில்திறப்பு, கச்சேரி முதலியவைகளுக்குச் செல்லும் நிலையும் தன் இனத்தார் அஞ்சி வாடத் தஞ்சம் என வந்தோர் தரணியை ஆளவும், தாய்மொழி அழியப் பிறமொழி வாழவும், உற்பத்தியைப் பெருக்கு எனக் கூறிக்கொண்டு ஊதாரிச் செலவு செய்தும், மக்களை மாக்களாக நடத்தும் இந்த மதிகெட்ட ஆட்சிமுறையை மாற்றும் எண்ணமுள்ள தனி ஒருவனுக்கே (சுயேச்சை) என் ஓட்டு.

வேணுநாராயணன்
திருக்காட்டுப்பள்ளி

★

தேர்தல், தேனீ போன்ற தேள்கடிச் சம்பவங்களுக் கிடையே நடைபெறுமா அல்லது காந்தியாரின் அகிம்சைப் பாதையில் நடைபெறுமா என்ற ஐயம் எழுகிறது என் மனத்திலே. 'நாட்டை மீட்டோர் நாங்கள்! ஊராளும் உரிமை எங்களுக்குத்தான்' என்று உரத்த குரலிலே பேசுகிறார்களே அவர்களுக்கா உங்கள் ஓட்டு? 'தேவைக்கேற்ற உணவு, சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்பிற் கேற்ற ஊதியம்' என்று பேசும் சமதர்மவாதிக்காக உங்கள் ஓட்டு? காண்பதெல்லாம் பொதுஉடமை என்று சொல்வதே அறிவுடைமை என்று சொல்லும் பொதுஉடைமை வாதிக்கா உங்கள் ஓட்டு? சந்தர்ப்பத்திற்கேற்பச் சரீரத்தை மாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாதிக்கா உங்கள் ஓட்டு? உங்கள் பகுத்தறிவு என்ற பகலவன் ஒளியைச் செலுத்திப் பாருங்கள். எவர் நாம் இழந்துபோன இன்ப வாழ்வைப் பெற முயற்சிப்பார் என்று தெரிகிறதோ அவருக்கே உங்கள் வாக்கை வழங்குங்கள். இல்லாவிட்டால் வாளாயிருங்கள்.

மதியகன்
சென்னை

இழப்பேனோ என் தமிழை!

வீர. மெய்யப்பன்

நாற்றமிகும் மலர்குலுங்கும் சோலைக் குள்ளே
நடனத்தைச் செய்வாள்போல் நடந்து வந்தாள்.
மாற்றெதுவும் குறையாத பொன்னே என்ன,
மலருடல்தான் மாலைவெயில் பட்டு மின்ன,
வேல்தோற்கும் விழியுடையாள், என்னுள்ளத்தை
விழிக்கடையால் திருகிவிடும் திறமை வாய்ந்தாள்,
வீற்றிருந்த என்னருகே வந்து நின்றாள்.
விளையாட்டுக் காட்டுகிறாள் ; பேசவில்லை !

தனிமையிலே சாகுமெனை வாழ வைப்பாள்
தனிமயிலென் றெண்ணியெழிற் சோலை சென்றேன்.
"இனிமையிலே எனைச்சாய்ப்பாய் என்று வந்தேன்.
எழில் மயிலே! பேசாய் நீ பேசாய்!" என்றேன்.
"கனிமொழியே! ஆருயிரே!' என்ற தாங்கள்
கனல்சிந்தும் பெரியோர்கள் சொல்லைக் கேட்டு
எனைமறந்து வாழ்வீரோ என்னும் ஐயம்
எழுந்த"தெனச் சொல்லியவள் நீருகுத்தாள்.

வாராதோ தென்றலெனச் சோலை சென்றேன்.
வந்தாளே ஐயமெனும் வாளை வீச!
தீராத சுவையுடைய பழமென் றெண்ணித்
தீத்தொட்டுக் குதிக்கின்ற குழந்தை யானேன்!
"ஓராது செய்கின்றாய் ; சரியே அன்று
உன்போக்"கென் றார்மக்கள் சொன்ன துண்மை!
மாறாத உள்ளமெனக் குண்டென் றந்த
மயிலாளோ அறியவில்லை. எடுத்துரைத்தேன்!

“சேற்றினிலே தோன்றும்செந் தாம ரையில்
சேர்ந்த திருமகள்தான் வாழ்வாள்” என்று
சாற்றிவரும் திருக்கூட்டம் என்பால் வந்து
‘தாழ்வான குலத்துதித்த பெண்ணாள் தன்னைப்
போற்றாதே; புகழாதே; பொன்னில் தாலி
போடாதே; பெரும்பாவம்!’ என்று சொன்னால்
தூற்றாதே விடுவேனா புல்லர் செய்கை?
துரும்பாநான் சூழ்ச்சியெனும் புயலிற் சிக்க?

வழிந்தோடும் தண்ணீரா அவர் திருப்பும்
வாய்க்காலின் வழியோடிப் பணிந்து வாழ?
‘அழகாடும் சுவைப்பாடல் எறிவ தாநான்
அஃதமைந்த தாள்மட்டம் என்று சொன்னால்?
இழப்பேனா என்தமிழை — ஏந்தி ழையை?’
என்றார்த்து முடித்திட்டேன்” என்று சொன்னேன்.
தழுவியெனக் குயிர்தந்தாள்; “பழச்சுவையா,
தமிழ்ச்சுவையா?” எனக்கேட்டேன். “இதழே” என்றாள்

ஆடும் மாடும்

டி.கே. சீனிவாசன்

மூன்றும் அத்தியாயம்

உச்சியில் இருப்பவர்களை விட உச்சியை அடைபவர்கள்தாம் கடுமையும் கண்டிப்புமாகக் காணப்படுகிறார்கள்! மெல்லக் கீழேயிருந்து ஊர்ந்து உயர்ந்து உச்சியை அடைந்த கதிரவன் கூட இந்த விதிக்கு விலக்காக இல்லை! வாட்டி வதைத்துக் கொண்டிருந்தான் உலகத்தை!

வெப்பங்கூட வேதனையைத் தரவில்லை சக்குவுக்கு. அவளுடைய அத்தான் சேகரனுக்குச் சாப்பாடு எடுத்துப் போக வாசு இன்னும் வரவில்லை. அதை நினைத்தபோதுதான் அழுகையும் ஆத்திரமும் அவளையும் மீறி எழுந்தன.

ஒருவேளை சேகரன் ஹோட்டலுக்குச் சாப்பிடப் போய்விட்டால்...? வேதனை வெறியாட்டம் போட்டது அவள் இதயத்தில். பரிதாபமாக அந்தச் சாப்பாட்டுப் பாத்திரத்தைப் பார்த்தாள். சூடிக்கொண்ட மலர் சொந்தக்காரனை மகிழ்விக்காமல் வாடிப் போவதைப் போல...! அதைத் தயாரிக்க அவள் பட்ட கஷ்டமும் எடுத்துக் கொண்ட அக்கறையும்...

சுற்றிக் கொண்டிருந்த கடிகார முட்களோடு சேர்ந்து சுழன்றன அவள் நினைவுகள். ஒரு நிமிடங்கூட ஆகவில்லை பெரிய முள் சிறிய முள்ளைச் சேர்த்தணைத்தபோது. ஆனால் அதன் விளைவு...? ஒலிகள் பனிரெண்டு உதிர்ந்து விழுந்தன! உடனே விரைந்து நகர்ந்தான் காதலன். தொடர்ந்து ஊர்ந்தாள் காதலி. எட்டிப் பிடிப்பதென்னவோ சிரமமாகத்தான் இருந்தது சிறிய முள்ளுக்கு. அதன் போக்கிலேயே விட்டுவிட்டால் சுற்றி

யலேந்துவிட்டுத் தன்னிடந்தான் வரவேண்டும் என்ற உண்மை மட்டும் தெரியாமல் போய்விட்டது அந்தச் சிறிய முள்ளுக்கு!

பருவம் அவளேப் பக்குவப் படுத்திவிட்டது என்று எடுத் காட்டியது சக்குவின் இதயத்தில் தோன்றிய இந்த உவமை! ஒருவேளே சேகரன் வீட்டுக்கே சாப்பிட வந்துவிட்டால்......? நாணம் கவிந்தது அவள் முகத்தில், இந்த நினைவு தோன்றிய போது. உடனே வாயிற்படியை நோக்கி நடந்தாள்—இல்லே, மிதந்தாள்.

வெளியில் ஏமாற்றந்தான் காட்சி அளித்தது. குறுகிச் சிறுத்திருந்த நிழலில் சில நாய்கள் படுத்திருந்தன. தாழ்த்தி வைக்கப்பட்ட வண்டிகளும்—அவிழ்த்து விடப்பட்டதால் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்த மாடுகளும். அவளுக்குத் தேவையே இல்லாத காட்சிகள் தாம் இவை—ஆனாலும் பார்த்துத் தொலேக்கத்தான் வேண்டி வந்தது! மனித நடமாட்டமே இல்லே வீதியில். வெறுப்போடு திரும்பி விரக்தியோடு நடந்தாள் உள்ளே.

எதிரே காணப்பட்ட கண்ணுடியில் அவள் உருவம் தெரிந்தது—எப்போதும் போல. ஆனல் அது அப்போது பேசத் தொடங்கியது—புதிதாக. கவனித்தாள்.

"நீயே எடுத்துப் போனால் என்ன, சக்கு?"

"ஐயோ! நான் மாட்டேன்! எனக்கு வெட்கமாக இருக்கிறது!"

"போடி அசடு! உன் அத்தான் உனக்கு அறிமுகம் ஆகாதவனா என்ன? சிறுவயதில் எங்கெங்கோ சுற்றி அலைந்திருக்கிறாய் அவனோடு"

"அப்போது நான் மொக்காக இருந்தேன்!"

"இப்போது...?"

"மலர்ந்துவிட்டேன்! மூடி போட்டு வைக்காத தேன் சீசா! எறும்புகள் மொய்த்து விடாத படிச் சுற்றிலும் ஊற்றப்பட்ட தண்ணீர்தான் வெட்கமும் நாணமும்!'

"போடீ பைத்தியமே! சூடேறினால் அந்தத் தண்ணீர் ஆவியாக நெடுநேரம் பிடிப்பதில்லை! இது தெரியாமல் உளறுகிறாயே! அங்கே அவன் பசியால் துடிக்கிறான்—இங்கே இவள் நீதி நூல் படிக்கிறாள்! ஆபத்துக்குப் பாபமில்லையடி, போ!"

என்ன நினைத்துக் கொண்டாளோ தெரியவில்லை. சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டுவெளியே நடந்தாள் சக்கு.

சேகரன் வசித்த அறையிலிருந்தமாடிப் படிகளில் அவள்மெல்லக் காலடி எடுத்து வைத்தபோது.... ...! குளிர்ந்த நீருக்குள் கொஞ்சங் கொஞ்சமாக உடலை அமிழ்த்துவதைப் போன்ற கோமளமான உணர்ச்சி அவளைக் கொள்ளை கொண்டது.

அறைக்குள் எவரையுமே காணோம். முதலில் பயமாகத்தான் இருந்தது சக்குவுக்கு. ஆனால் திரும்பிப் போக மட்டும் மனம் வரவில்லை. சுவரெல்லாம் முடிந்த—முடியாத சித்திரங்கள்! அவளுடைய அத்தான் ஒரு தேர்ந்த ஓவியன்! இந்த நினைப்பால் நெகிழ்ந்தது அவள்நெஞ்சு.

அவளும் அவள் அத்தானும்! அங்கே தனியாகத்தான் இருக்கப் போகிறார்கள்! அவளுக்குப் புரியாத குடும்ப வாழ்வை எப்படியோ தெரிந்துதான் வைத்திருந்தாள் சக்கு. மாத—வாரத் தாள்களில் எல்லாம் காதல் கதைகள் தாமே இருந்து தொலைக்கின்றன! வீடு தேடிவந்து உல

கத்தைக் கற்பிக்கும் அந்த ஏடுகளில் அவள் கண்ட கட்டங்கள்...!

வாதப்பிரதிவாதங்களால் தன் கற்பனையை வளர்த்தாள் சக்கு. வாழ்க்கையை நாடகத்துக்கு ஒப்பிடுகிறார்கள். சிறு வயதில் சக்கு பள்ளிக்கூடத்தில் நாடகங்களில் நடித்திருக்கிறாள். ஆகையால் இதில் உள்ள முரண்பாடு அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. நாடகங்களில் ஒத்திகை நடக்கும்போதுதான் கடுமையும் கண்டிப்பும் அதிகமாக இருக்கும். ஆனால் வாழ்க்கையில்......? தம்பதிகளாவதற்கு முன்னால் ஆணும் பெண்ணும் காதலர்களாக இருந்து ஒத்திகை நடத்தும்போது குறைகளைக் குதூகலத்தோடு வரவேற்கிறார்கள்! குடும்பம் தொடங்கிய பிறகுதான் தொல்லையும் வேதனையும்...! இதை நினைத்தபோது சிரித்துவிட்டாள் சக்கு.

அவளே உணவை யெடுத்து அவள் அத்தானுக்குப் பரிமாறினால் என்ன? எண்ணங்களால் அமைத்துப் பார்த்தாள் இந்தக் காட்சியை. ஒவ்வொன்றையும் எடுத்துக் கொட்டும் இவள் — அத்தனையையும் சுவைத்துச் சாப்பிடும் அவன்! கொதிப்போ, கோபமோ இல்லை — துடிப்போ, தொல்லையோ தோன்றவில்லை! ஒரே இன்பமயம்!

மகிழ்ச்சி தாங்காது மறுபடியும் சுற்றிலும் விழிகளைச் சுழற்றினாள். ஆனால்...? அத்தனைச் சித்திரங்களும் பேசும் அழகின் பிரதிபிம்பங்கள் — பெண்களின் ஓவியங்கள்!

ஒவ்வொரு சித்திரமும் "நான் உருவாவதற்கு முன்னால் உன் அத்தான் உள்ளத்தில்தான் இருந்தேன்" என்றது அவளைப் பார்த்து.

அப்படியானால் அவளுக்கென்றிருந்த அந்த இடம்...? முழுதும் கிடைக்கா விட்டாலும் பகுதியாவது...? ஏன் இங்கே வந்தோமென்றாகிவிட்டது சக்குவுக்கு.

"யார்?"

இந்தச் சொல் கேட்டுத் திரும்பினாள் சக்கு. சேகரன் எதிரே நின்றுகொண்டிருந்தான். இன்பம் உயிரோவியமாக அவள் எதிரே தோன்றியவுடன் துன்ப நினைவுகள் ஒடிப்பறந்தன. சஞ்சலம் மறைந்தது. சந்தோஷம் புகுந்தது. தலைகுனிந்து முகங் கவிழ்த்தாள்!



"சக்குவா! ஏன்? சாப்பாடு எடுத்துவர வேறு எவருமே இல்லையா?"

ஆதரவற்று அனாதையாகப் போனது இந்தக் கேள்வி.

சேகரனுக்கு அவள் அங்கே நிற்பது என்னவோபோலிருந்தது. யாராவது அந்த சமயத்தில் அங்கே வந்து தொலைந்தால்...?



"சரி சக்கு. சாப்பாட்டை வைத்துவிட்டுப் போ" என்ருன்.

எழுப்பிய இன்பக்கோட்டை இடிந்து தகர்ந்தது உடனே. இவளை விரட்டியடிப்பதிலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருக்கிருன் என்று எண்ணியது அந்தப் பேதையின் உள்ளம்.

ஆத்திரத்தோடு திரும்பினுள் போக. ஆனல்...யாரோ மாடிப் படிகளில் ஏறிவரும் ஓசை கேட்டது. அதுவரை மறைந்திருந்த அச்சமும் மடமும் வெட்கமும் நாணமும் அப்போதுதான் தோன்றி ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கின. உடனே அறைக்குள்ளேயே ஓடி மறைவிடந் தேடித் தன்னை ஒளித்துக் கொண்டாள் சக்கு. சேகரனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"என்ன சேகர்!" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் சோமு.

அவனைத் தொடர்ந்து ......? அந்தப்பெண்! சேகரன் விழிகள் அவள்முகத்தில் சிக்கி மிலைத்து விட்டன. இதுவரையில் அவன் அழகைத் தேடி ஓடியிருக்கிருன். ஆனல் இன்று அழகே இவனை நாடி வந்திருக்கிறது! ஓவியம் தீட்டுவதிலேயே அக்கரை காட்டும் அவன் உள்ளம் திடீரெனக் காவியம் புனைவதில் கவனம் செலுத்திற்று; தூரிகையையும் வர்ணத்தையும் துணையாகக் கொண்டிருந்த அதற்குச் சொற்களும் கற்பனைகளும் கிடைக்காததால் முயற்சியைக் கைவிட்டுவிட்டது!

"சேகர்! இவள் என் மாமன் மகள் மோகனு. அம்மாவும் அப்பாவும் இறந்து விட்டதால் அனுதையாகி விட்டாள். அதனுல் சக்குவோடு..." என்ருன் சோமு.

எல்லோரும் எதிர்பார்ப்பதைப் போலவே இந்த வேண்டுகோள் வீணுகிவிடவில்லை!

"இருக்கட்டுமே. சக்குவுக்கும் துணையாக இருக்கும்" என்று சொல்லிச் சக்கு இருந்த பக்கம் திரும்பினுன் சேகர்.

வியர்த்து விறுவிறுத்துப் போனுள் சக்கு. அவன் எதிர்பார்த்த விபரீதம் நடக்கப் போகிறது! பிறகு எந்த முகத்தோடு அவன் இந்த உலகத்தை...



"சக்கு! போகும் போது மோகனுவையும் வீட்டுக்குஅழைத்துப் போ!" என்று இடியைத் தூக்கிச் சக்குவின் தலைமேல் போட்டான் சேகரன்.

விழுந்தடித்துக் கொண்டு ஓடி விட வேண்டும் என்று எண்ணித் தான் வெளியே வந்தாள் சக்கு. ஆனல் என்ன நினைத்தாளோ, தெரியவில்லை; சேகரனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்ட காட்சி...! பசியோடு வெளியே உட்கார்ந்திருப்பவன் பந்தியில் பரிமாறப்படும் பதார்த்தங்களைப் பார்ப்பதைப் போலச் சேகர் மோகனவை......ஒடிந்து தூள் தூளாகச் சிதறியது அவள் உள்ளம். அளவுக்கு மீறி உணர்ச்சி வயப்பட்டதால் அசையாச் சிலையாகிவிட்டாள்.

"உடல் சீக்கிரம் திருப்தியடைந்துவிடும், சேகர்! உள்ளந்தான் பேராசை பிடித்தது" என்முன் சோமு.

சேகரன், மோகன இருவருமே திடுக்கிட்டுத் திரும்பினர். சக்குவின் உள்ளத்தில் எரிந்த தீ அவள் உடலிலும் தன் சாயலைக் காட்டியது. வேகமாகத் திரும்பி வெளியே நடந்தாள், வீதியில் கால் வைத்தபோது.

"சேகர்! காந்தர்வம் ஆதி காலத்து முறை. இப்போது அதை எவரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வது கிடையாது" என்று சோமு சொல்லிக் கொண்டிருந்தது அவள் காதுகளில் தெளிவாகவே விழுந்தது.

திரும்பிப் பார்த்தாள். மோகனு கூட வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பேக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு: *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-

சண்டை முடிந்தது!

டி.ஜே. இன்பராஜ்

சாயங்காலம் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் கோபு வேகமாக வீட்டிற்கு ஓடிவந்தான். அவனுடைய அப்பா அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வந்திருந்தார். தம்முடைய அறையில் உட்கார்ந்து அவர் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.

"அப்பா, அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே கோபு அந்த அறைக்குள் நுழைந்தான். அவனுடைய அப்பா பத்திரிகையை மேஜையின்மேல் வைத்துவிட்டு, "என்னடா, சமாச்சாரம்?" என்றார்.

"அப்பா எனக்கு ஒரு நல்ல நாய்க்குட்டி வேண்டும். நான் வளர்க்கப்போகிறேன்" என்று சொன்னான் கோபு.

"எனக்குக் கூடத்தான் அப்பா" என்ற சத்தம் கேட்டு அவர் கதவின் பக்கம் திரும்பிப் பார்த்தார். அங்கே கோபுவின் தங்கை சரோஜா நின்றுகொண்டிருந்தாள். வேகமாக ஓடிவந்ததால் அவள் இரைக்க இரைக்க மூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்.

"ஏம்மா, பள்ளிக்கூடத்திலிருந்து மெதுவாக வரக்கூடாதா? மூச்சு வாங்குகிறதே" என்று அப்பா அன்புடன் கேட்டார்.

"உங்களிடம் சொல்லி நாய்க்குட்டியை முதலில் வாங்கப்போவதாக அண்ணா சொன்னான். அதனால்தான் ஓடிவந்தேன். எனக்கும் நாய்க்குட்டி வாங்கிக் கொடுப்பீர்களா?"

"ஒரு நாய்க்குட்டி வாங்கிக் கொடுக்கிறேன். இரண்டு பேரும் வளர்த்து வாருங்கள்."

"ஊஹூம்... எனக்குத் தனியாக வேண்டும்" என்று சொல்லிச் சரோஜா கண்களைக் கசக்கினாள். "சரி, சரி,

அழாதே. வாங்கித் தருகி றேன்" என்றார் அப்பா.

கோபுவும் சரோஜா வும் செல்லக் குழந்தைகள். அவர்கள் எதைக் கேட்டா லும், அப்பா வாங்கிக் கொடுத்து விடுவார். கோபு வுக்கு ஒரு சட்டை தைத் துக்கொடுத்தால் சரோஜா வுக்கு ஒரு கவுன் தைத்துக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அன் றைக்கு வீட்டில் ஒரே ரகளைதான்.

அப்பா இரண்டு நாய்க்குட்டிகளைக் கொண்டுவந்தார். நாய்க் குட்டிகள் கொழுகொழுவென்று அழகாகத் தோன்றின. அவை களின் உடம்பு முழுவதும் மயிர் அடர்த்தியாக இருந்தது. கருப்பு நிற நாய்க்குட்டியைக் கோபு எடுத்துக்கொண்டான். வெள்ளை நிற நாய்க்குட்டியைச் சரோஜா எடுத்துக்கொண்டாள்.

கோபுவும் சரோஜாவும் தினமும் சாப்பிடுவதற்குமுன் சிறு அலுமினியத் தட்டுகளில் நாய்க்குட்டிகளுக்குச் சோறு பிசைந்து வைப்பார்கள். இரண்டு நாய்க்குட்டிகளுக்கும் தனித்தனித் தட்டு கள் இருந்தன. அவைகளைக் கோபுவும் சரோஜாவும் கழுவிச் சுத்த மாக வைத்துக்கொண்டார்கள்.

அன்று பகல் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் சரோஜா தன் வெள்ளை நாய்க்குட்டிக்கு ஒரு தட்டில் ஆகாரத்தை வைத் தாள். அந்தச் சமயம் அவளுடைய நாய்க்குட்டி அங்கில்லை. சரோஜா நாய்க்குட்டியைத் தேடிக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றாள்.

தோட்டத்தில் ஒரு மரத்தின் அடியில் வெள்ளை நாய்க் குட்டி படுத்திருந்தது. சரோஜா அதைத் தூக்கிக்கொண்டு வீட் டிற்குள் வந்தாள். தட்டில் நாய்க்குட்டிக்காக வைத்திருந்த ஆகா ரம் காணப்படவில்லை. அந்தத் தட்டிற்குப் பக்கத்தில் கருப்பு நாய்க்குட்டி வாலை ஆட்டிக்கொண்டிருந்தது.

சரோஜாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. வெள்ளை நாய்க் குட்டிக்கு வைத்திருந்த ஆகாரத்தைக் கருப்பு நாய்க்குட்டி தின்று விட்டது. சரோஜாவுக்கு அதன்மேல் ஆத்திரம் உண்டாயிற்று.

அவள் நாய்க்குட்டியின் இரு காதுகளையும் பிடித்துத் தூக்கி வெளியே எறிந்தாள். 'வாள்' என்று கத்திக்கொண்டு அது ஓடியது.

கோபு அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டான். அவன் கோபத்துடன் ஓடிவந்து சரோஜாவின் தலையில் குட்டினான். அவள் அவனுடைய சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்து விட்டாள். அவர்கள் போட்ட கூச்சலைக்கேட்டு அம்மா ஓடிவந்து இருவரையும் பிரித்து வைத்தாள்.

அன்றைய தினத்திலிருந்து கோபுவும் சரோஜாவும் பேசிக் கொள்வதில்லை. இருவருடைய சண்டையைத் தீர்த்துவைக்க அவர்களுடைய அப்பா படாதபாடு பட்டார். அவரால் முடியவில்லை.

அன்று காலை திடீரென்று அப்பா கோபுவையும் சரோஜா வையும் கூப்பிட்டார். இருவரும் அவருடைய அறைக்குச் சென்றனர். "அங்கே பாருங்கள்" என்று அவர் தோட்டத்தைச் சுட்டிக் காண்பித்தார்.

அங்கு கருப்பு நாய்க்குட்டியும் வெள்ளை நாய்க்குட்டியும் விளையாடிக்கொண்டிருந்தன. "இந்த நாய்க்குட்டிகளுக்காக நீங்கள் சண்டை போட்டுக்கொண்டு பேசாமலிருக்கிறீர்கள். அவைகளைப் பாருங்கள். எவ்வளவு ஒற்றுமையாக இருக்கின்றன!" என்று அப்பா சொன்னார்.

கோபுவும் சரோஜாவும் வெட்கமடைந்தனர். சரோஜா அங்கிருந்து தோட்டத்திற்கு ஓடி கோபுவின் நாய்க்குட்டியைத் தூக்கித் தடவிக்கொடுத்தாள்.

அன்று மாலை பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்பொழுது கோபுவும் சரோஜாவும் கைகோர்த்துக்கொண்டு வந்தனர்.

குழந்தை கிடைத்தது!

சுலோசனா

வீட்டின் முன்னே கார் நின்றதும் ஆவலுடன் எட்டி நோக்கினேன். எனது அழகிய பங்களா பாழடைந்து விட்டது போல் காட்சியளித்தது. எனினும் காம்பவுண்ட் சுவர்மீது படர்ந்து கிடந்த மல்லிகைக் கொடியும், அசைந்தாடிய வண்ணம் பங்களாவின் வாயிலை மறைத்துக்கொண்டிருக்கும் வேப்பமரமும் பழையபடியே தானிருந்தன. அவைகளைப் பார்க்கும்போது கண்கள் எத்தனை குளிர்ச்சியடைகின்றன! என் தோட்டக்காரன் சுப்பு—இருபது வருடமாக என்னிடம் வேலை பார்க்கும் அக்கிழவன்—கார் சப்தம் கேட்டுப் பரக்கப் பரக்க ஓடி வந்தான். என்னைக் கண்டதும் அவனது சுருக்கம் விழுந்த முகம் மலர்ந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, "அம்மா, சுகமாக வந்து சேர்ந்துட்டீங்களே, அதுவே போதும்!" என்றான். உணர்ச்சிப் பெருக்கால் அவனது குரல் தழதழத்தது.

நான் அவனை அன்போடு நோக்கியவாறே, "நான் இல்லாத போது வீட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாயே — அதுவே போதும் சுப்பு!" என்றேன். சுப்பு பெருமூச்செறிந்தான். என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மெலிஞ்சு குச்சியாப் போய்ட்டீங்களே அம்மா!" என்றான் துயரத்தோடு.

"விஷ ஜுரம் என்னை அப்படியே விழுங்கி விடவில்லையே—அதைச் சொல்லு!" என்றேன் நான் ஒருவிதமாகச் சிரித்துக்கொண்டே. பிறகுதான் என் பார்வை, சுப்புவின் பின்னால் வந்து நின்ற அந்தப் பெண்மீது விழுந்தது. "சுப்பு, இவள்தானா மாரியாயி?" என்று கேட்டேன்.

"ஆமாம்மா பழய வேலைக்காரி 'முடியாது'ன்னு ஓடிப் போய்ட்டதும், அம்மாவுக்குத் துணையா யாராகிலும் வேணுமேன்னு இவளைப் பிடிச்சி வந்தேன். என் தங்கச்சி மவதான். தங்கமான பொண்ணு. நல்லா வேலை செய்யும். மாரி, இப்படி வாம்மா!" கிழவன் அழைத்ததும் மாரி பக்கத்தில் வந்து நின்று எனக்கு வணக்கம் செய்தாள். என் புதிய வேலைக்காரியைக் கவனித்தேன்—இன்னும் காரினுள்ளேயே இருந்தபடி. நல்ல அழகான பெண். கட்டுமஸ்தான சிவந்த உடம்பு. குறுகுறுத்த விழிகள். உற்சாகம்

வழிந்தோடும் முகம். சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். கழுத்தில் தாலியைக் காணாதது எனக்கு ஆச்சரியமாக விருந்தது.

"ஏன் சுப்பு, இன்னும் கல்யாணம் ஆகவில்லையா இவளுக்கு?" என்று கேட்டேன். கிழவனின் முகம் கணத்தில் மாறிவிட்டது. "கலியாணம் ஆயிருந்ததுங்க. ஒரு பையன் பொறந்ததும் புருசனை வாரி முழுங்கிட்டான். தாலியை அறுத்துக்கிட்டு இப்படியும் அப்படியுமாக் காலத்தைக் கழிக்கிறது, பாவம். வேறேகதி?" என்றான்.

"பையன் இருக்கிறானா?"

"இருக்கிறானுங்க. எட்டு வயசிருக்கும். பள்ளிக்கூடத்திலே நாலாவது வாசிச்சிக்கிட்டிருக்கான்!"

நான் யோசித்தேன். மாரி என்னோடேயே வசிக்கப்போகிறாள். அப்படியெனில் — அவளது மகன்? அவனும்...

"சுப்பு! மாரி தன் மகனையும் தன்னோடேயே வைத்துக் கொள்ளலாமென்று நினைக்கிறாளா?" என் கண்கள் மாரியை நோக்கின. ஆவல் ததும்பும் முகத்தோடு என்னைப் பார்த்த மாரியின் பார்வை என் நெஞ்சை என்னவோ செய்தது. சுப்பு தலையைச் சொறிந்தான். "என்னவோம்மா, உங்க இஷ்டம். புருசன் இல்லாத பொண்ணு. பையன்மீது உசிரையே வச்சிருக்காள். உங்களுக்கு இஷ்டம்னா பின்கட்டு அறையில் பையனை வச்சிக்கிட்டு இருந்துட்டுப் போறாள்..."

"பார்ப்போம்" என்றேன் நான்; மாரியின் முகம் மலர்ந்தது.

கைலாகு கொடுத்து என்னை அவள் உள்ளே அழைத்துச்

"பார்த்தீர்களா சார், அவ்வளவு உயரத்திலிருந்து எவ்வளவு தைரியமாய்க் குதிக்கிருன்!"

சென்ற விதம் எனக்கு மிகவும் திருப்தியை அளித்தது.

2

பதினெட்டு வயதில் என்னைக் கைப்பிடித்த என் கணவர், நாற்பத்தைந்து வயதில் பிடியை விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். நான் விதவையானேன். இருபத்தேழு வருட மணவாழ்க்கை! ஆ! எத்தனை இன்பகரமாக அந்த நாட்கள் கழிந்தன! ஆனால் அந்த இன்பத்திற்கு அடையாளமாக எனக்கு ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லை! என்றென்றும் மாருத நித்திய வேதனையாக அத்துயரம் என் நெஞ்சில் உறைந்துவிட்டது.

என் கணவருக்கு நல்ல சம்பாத்தியம் உண்டு. குடும்பச் சொத்து ஏராளம். நாங்கள் இந்த வீடு கட்டும்போது—அவர்தான் இதற்குப் 'பச்சை மாளிகை' என்று பெயரிட்டார்—ஒருநாள் என்னை அவர் அணைத்தவாறே, "ராஜி! நாம் இதைச் சுற்றிலும் அழகான தோட்டம் அமைக்கலாம். நமது குழந்தைகள் தோட்டத்தில் பட்டுப் பூச்சிகளைப் போல் பறந்தாடி விளையாடுவதைக் கண்குளிரப் பார்க்கலாம்!" என்ருர். அவரது கனவுகளில் ஒன்று நிறைவேறியது. பச்சை மாளிகை அழகுற ஒளி வீசியது; பிருந்தாவனம் போல தோட்டமும் அமைக்கப்பட்டது. சுப்பு நன்ருக உழைத்தான். அவன் நல்ல அனுபவசாலி. அவனது குடும்பத்தைப் பற்றி அதிகமாக ஒன்றும் எனக்குத் தெரியாது. மாரியைப் பற்றி ஏதோ கேள்விப்பட்டிருக்கிறேன்—அவ்வளவுதான்.

குழந்தைகள் பிறக்கவில்லையே என்று என் கணவருக்கு ஆருத் துயரம்தான். எனினும் அதை வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. அதற்காக வேறு கலியாணம் செய்யவேண்டுமென்று நினைக்கவுமில்லை. கடைசியில்—அவர் போய்விட்டார். 'கொள்ளை'ப் பணம் என் காலின் கீழே கிடந்து மிதியுண்டது. "மிஸிஸ். சாமி" அவ்வூருக்கே 'ராணி'யாகக் கருதப்பட்டாள்! இருந்தும்—என்ன பயன்? நான் ஒரு பணக்கார விதவை! பணமிருந்தும் பயனென்ன? அனுபவிக்கக் குழந்தைகள் இல்லையே! குழந்தை இல்லாத வீடும் ஒரு வீடாகுமா? 'குழந்தை இல்லை'

என்ற துக்கம் என்னைப் பைத்தியமாக அடித்துக்கொண்டிருந்தது.

பிறர் குழந்தைகளைக் கண்டு பொறுமைப்படவும் ஆரம்பித்துவிட்டேனென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! எனது சொந்தக் குழந்தைகள் எனது தோட்டத்தில் விளையாடி மகிழுவதைக் கண்டு பூரிக்கவேண்டுமென்றிருந்த எனக்கு, வேறு குழந்தைகள் அங்கு நுழைவதைக் கண்டால் கோபம் பற்றி எரியும்! அவர்களை விரட்டியடித்த பிறகே மறுவேலை பார்ப்பேன்!

"ஏண்டா குரங்கே, பள்ளிக்கூடம் போடான்னு, மரத்துமேலே ஏறிக்கிட்டே!"

3

திடீரென்று நான் விஷ ஜுரத்தில் வீழ்ந்தேன். அப்படியே செத்துத் தொலையமாட்டேனோ என்றிருந்த என்னைச் சுப்பு தப்ப வைத்துவிட்டான்! பலவந்தமாக என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகச் செய்து இடைவிடாத கண்காணிப்பினால் என்னைச் சௌக்கியமாக்கிவிட்டான்! நான் சுப்புவுக்கு நன்றி செலுத்தவில்லை. எனக்கு அவன்மீது கோபம்! நான் உயிரோடிருந்து என்ன பயன்? குழந்தையில்லாத பாவி...

ஆஸ்பத்திரியினின்றும் திரும்பி வந்தேன். மாரியின் அன்பைப் பெற்றேன். ஆனால் மாரியின் பையன் தினகரனை ஏன் எனக்குப் பிடிக்கவில்லையென்று எனக்கே தெரியவில்லை...'பிடிக்கவில்லை' என்றால் அவனை நான் வெறுத்தேன் என்பதல்ல. ஏதோ ஒரு காரணம்—எனக்கும் ஒரு குழந்தை இருந்திருந்தால் இவனைப் போல் குறுகுறுவென்றிருப்பானே என்ற பொறுமை—என்னை அவ்வாறாக்கிவிட்டுவிட்டது!

தினகரன் சுட்டி. எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் கலகலவென்றிருப்பான். கெட்டிக்காரப் பையன் என்பதை அவனைக் கண்டவுடன் அறிந்துகொள்ளலாம்! புன்னகை பூத்த முகம். தாயைப் போலச் சிவப்பாக அழகாகவிருந்தான். காலையில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுகையில் உற்சாகமாகப் பாடிக்கொண்டே அவன் செல்லும் காட்சி என்னை என்னவோ உறுத்திக்கொண்டிருந்தது......தினகரனின் கை சும்மா இராது. ஏதாவது வேலை செய்துகொண்டேயிருக்கும். லீவு நாட்களில் தோட்டத்தை விட்டு நகரமாட்டான். ஏதா

கிலும் ஒன்றைக் கிளறிக் கொண்டேயிருப்பான். "மாரி, உன் பையனை என் பூச்செடிகளில் கை வைக்காமல் பார்த்துக் கொள்!" என்று மாரியை அடிக்கடி எச்சரிப்பதுண்டு நான். அப்பொழுதெல்லாம், "அதெல்லாம் வேண்டாத குறும்பு செய்யவே மாட்டானம்மா அவன்" என்று கூறிவிட்டுச் சோகப் புன்னகை புரிவாள் மாரி.

4

ஒருநாள் அந்தி நேரம். காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்ததால் தோட்டத்தில் மெதுவாக நடக்கலானேன் நான். வசந்த காலமாகவிருந்தும் தோட்டத்துச் செடிகள் செழிப்பாக இராதது எனக்கு ஏமாற்றத்தையளித்தது. "சுப்பு, உனக்கும் வயசாகிறது. நீ ஒண்டியாக என் தோட்டத்தைக் கண்காணிப்பது கடினம்தான். கூடமாட வேலை செய்ய ஒரு ஆளைப் பார்த்துக் கொள்ளேன்!" என்று சுப்புவிடம் யோசனை கூறினேன்.

நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தான் சுப்பு. மண்வெட்டியை மரத்தடியில் சாய்த்து வைத்துவிட்டு என்னோடு நடக்க ஆரம்பித்தான்.

"நானும் அப்படித்தானுங்க யோசித்துக்கிட்டிருந்தேன். ஆனால் அம்மா கிட்டே எப்படிச் சொல்றதின்னு தயக்கம். நானும் இருபது வருசமா அம்மாகிட்டே உழைச்சிட்டேன். என் வேலையிலே குத்தம் வரல்லே. வயசாக ஆக உடம்பு களைச்சிப் போவதால் இனிமே எப்படியோ? அம்மா ஒண்ணும் நினைச்சுக்கக் கூடாது!" என்று கையை உராயபடியே மொழிந்த சுப்பு பல்லைக் காட்டினான்.

"உன்னுடைய அருமை எனக்கல்லவா, தெரியும் சுப்பு? ஒரு வினாடியைக்கூட வீணாக்காமல் உழைத்த உனக்கு மேலும் நான் வருத்தம் தருவது நியாயமல்ல. கூட ஒரு ஆள் அவசியம் வேண்டும். கிடைக்குமா?"

"பார்க்கணும் அம்மா. கிராமத்திலே சில சின்னஞ் சிறுசுகள் உண்டு. கூப்பிட்டா ஓடனே வருமுங்க."

"ரொம்பவும் சின்ன ஆள் ஆகாது சுப்பு. திடகாத்திரனான ஆண்பிள்ளைதான் தேவை."

"நான் பார்த்துக்கிறேனுங்க!"

இருவரும் தோட்டத்தின் மத்தியில் வந்தோம். அங்கு ஒரு மரத்தடியில் சில இரும்புப் பொருள்கள் சிதறிக் கிடந்ததை நான் வெறிக்கப் பார்த்தேன். ஒரு ஒடிந்த உளி, தேய்ந்துபோன கத்தி, துருப்பிடித்த இரும்புச் தட்டுகள் — உருளைகள், ஒரு தகர டப்பா! இத்தனையும் அங்கு கிடந்த காட்சி என்னைப் பார்த்துக் கேலி செய்வதுபோலிருந்தது.

நான் கோபமுடன் சுப்புவைப் பார்த்தேன். "சுப்பு! என் தோட்டத்தை இவ்விதம் தாறுமாறாக்கவா மாரி தன் பையனை இங்கு கொண்டு வந்திருக்கிறாள்? அந்தப் பையன் வர வரக் கெட்டுப் போகிறான்! இதெல்லாம் என்ன?" என்று உறுமினேன்.

"தோட்டத்திலிருந்து குப்பைகளை வெளியே தள்ளுவதற்கு வண்டி செஞ்சிருக்கான் போலிருக்குப் பய..."

சுப்புவை நான் இடைமறித்து, "குப்பையை அகற்றுவதற்குத் தோட்டத்தை ஒரே குப்பைக் காடாகவா மாற்றுவது? இதெல்லாம் எடுத்து அப்புறப்படுத்து. பையனை - மரியாதையாக இருக்கச் சொல். வண்டி செய்தான் வண்டி!" என்றேன் படபடப்பாக. சுப்பு நிலை தடுமாறிவிட்டவன்போல் மௌனமாக நின்றான்!

5

என் புதிய தோட்டக்காரன் நல்ல உடல் வன்மையுள்ள இளைஞன். முப்பதுவயதிருக்கும். மணமாகி மனைவியைப் பறிகொடுத்தவன். பிள்ளை குட்டிகளில்லை. அவன் பெயர் ரங்கண்ணன். சுப்புவைப்போல் அவனும் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்ற கருத்துடையவன். சுப்புவிற்கு நல்ல துணை.

"அம்மா, பையன் மாடாக உழைக்கிறான். எப்போதும் வேலை மேலேயே கண்ணு!" என்று புகழ் பேசலானான் சுப்பு.

வேலைமீது மட்டிலுமா கண்? மாரிமீதும் அவன் கண்போட்டு வருகிறானென்பதை நான் கவனிக்கத் தவறவில்லை!

மாரி 'சிறிசு' தானே? தழதழவென்று இருந்தாள். வாழ்க்கையை வெறுக்கும் வயதா அது? இல்லையே! பின் அவளுக்கும் ரங்கண்ணனுக்கும்...

நான் யாதொன்றிற்கும் கவலைப்படவில்லை!

6

மாதங்கள் பல கடந்தன.

ஒருநாள் - வழக்கம்போலப் புத்தகப் பையைத் தோளில் மாட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச்சென்றான் தினகரன். அன்று அவன் நடையில் வேகம் இல்லை. முகத்தில் உற்சாகம் இல்லை. பாட்டும் பாடவில்லை...ஏன்?

மாடியில் எனதறையில் அமர்ந்து, நரைத்த என் தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டிருந்த நான், 'அது ஏன்?' என்று எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன். தினகரனின் பாட்டைக் கேட்க வேண்டுமென்று என் காது திடீரென்று ஏங்கியது! அது எனக்கே ஆச்சரியத்தை அளித்தது! வீட்டில் பிள்ளைகள் இருந்தாலேயே அது 'கலகல' வென்றிருக்கும். என் வீட்டிற்கு அந்தப் பாக்கியம் மறுக்கப்பட்டுவிட்டது. ஆனால் மாரியின் மகன் வந்தபின் அந்தக் கலகலப்பு குடியேறியது. ஐந்து பிள்ளைகளுக்குத் தினகரன் சரி - அவன் அத்தனை சூட்டிகை!

'தினகு ஏன் இன்று உற்சாகமாக இல்லை? ஏன் பாட்டுப் பாடக் காணோம்? மாரி அவனை அடித்தாளா? இன்று வீடு உறங்குவது போல் ஏன் காணப்படுகிறது?' என்று பலவாறு சிந்தித்தபடியே படியிறங்கிக் கீழே சென்றேன். மாரி அடுப்படியில் காரியமாக இருந்தாள். வீடு 'கம்' மென்று அமைதியாக இருந்தது.

வெளியே சுப்புவின் மண்வெட்டி (அன்று ரங்கண்ணனுக்கு விடுமுறை) "தட், தட்" என்று ஒலி செய்து கொண்டிருந்தது. நான் தோட்டத்தில் நடந்தேன். மாரி என்னைக் கவனிக்கவில்லை. பலப்பல யோசனைகள் என் உள்ளத்தில் கடினமாக மோதியடித்தன. ஏதோ ஒருவித உணர்ச்சி என் மண்டையில் தட்டிக்கொண்டிருந்தது. அழவேண்டும்போல் இருந்தது எனக்கு. ஆனால் அடக்கிக் கொண்டேன். எவ்வளவோ சங்கடங்களைச் சகித்தவளல்லவா நான்?

7

தோட்டத்தில் ஓர் ஓரமாக அடர்ந்து செழித்து நின்ற புதரண்டை நெருங்கியதும் என் சிந்தனை கலைந்தது. அது என்ன சப்தம்?... ஆம்! ஒரு சிறுவனின் விம்மல்! சட்டென்று புதரை விலக்கிவிட்டு எட்டி நோக்கினேன். தினகு உட்கார்ந்திருந்தான். முகத்தை மறைத்துக் கொண்டிருந்த அவனது கைவிரல்களினூடே கண்ணீர் முத்து முத்தாக உதிர்ந்து கொண்டிருந்தது. புத்தகப் பை கவனிப்பாரற்று மண்ணில் கிடந்தது. தினகு அழுவதை அன்று தான் கண்டேன்!

"தினகு!"

அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். கண்ணீரால் பளபளத்த கண்களால் என்னைத் திகிலோடு நோக்கினான். ஒரே பார்வைதான்—பிறகு தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

"தினகு! ஏன் பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை?"—எனது கேள்விக்கு அவன் பதிலளிக்கவில்லை; தலைநிமிரவுமில்லை.

"உண்மையைச் சொல்லிவிடு. ஏன் பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை? ஏதாவது அக்கிரமம் செய்துவிட்டு வந்தாயா?" என் பேச்சில் கடுமை தொனித்தது.

தினகுவின் இளமேனி படபடத்தது. "இல்லையம்மா, இல்லை... வந்து... ஒன்றுமில்லை."

அவன் அலறினான். தலைநிமிரவில்லை.

"என்னிடம் பொய் சொன்னாயானால் சும்மா விடமாட்டேன். நடந்ததை அப்படியே சொல்லிவிடு!" என்று கர்ஜித்தேன். தினகு தலைநிமிர்ந்தான். அவன் பார்த்த பரிதாபமான பார்வை ஈட்டிபோல் என் நெஞ்சை ஊடுருவித் துளைத்தது.

"இல்லையம்மா. என்னால் தாங்க முடியவில்லை. ஒன்றிலுமே மனம் ஓடவில்லை. பள்ளிக்கூடத்திற்குச் சென்றால், பொம்மை போல உட்கார்ந்திருக்கவேண்டியதுதான்! மனம் ஓடினால்தானே?"

பையனின் பேச்சு என்னைப் பிரமிக்க வைத்தது. "என்ன நடந்தது தினகு?" என்று கேட்டேன். என் குரல் திடீரென்று சாந்தமாக மாறிவிட்டது!

அவன் விசித்தான். "எனக்கு அப்பா இல்லையே என்று எவ்வளவோ வருத்தம். அம்மா மேலே உயிரையே வைத்திருந்

தேன். அம்மா என்னை மறந்துவிட்டு அந்த ரங்கண்ணன் மாமா மேலே ஆசை வைத்திருக்கிருள்! மாமாவையே கட்டிக்கப் போகிருளாம்! மாமா அப்பாவாக முடியுமாம்மா? அப்புறம் இரண்டு பேரும் என்னை மறந்துவிட மாட்டார்களா? அதை நினைக்கையில் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. சாகவேண்டும் போல் இருக்கிறது!''

தினகுவின் பரிதாபமான பேச்சும், கண்ணீரும் என் நெஞ்சை இரண்டாகப் பிளந்துவிட்டன. சட்டென்று அவனை வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொண்டேன்! பிரமித்துப்போன தினகு பேச்சு மூச்சற்றுப் போனுன்! பிறகு சாதாரணமாகத் தன் முகத்தை என் தோள் மீது சாய்த்துக் கொண்டான்!

"ரங்குவைக் கட்டிக் கொண்டாலும் உன்னை உங்கம்மா மறந்துவிட மாட்டாள் தினகு. நீ கவலைப்படாதே! இதற்காகவா அழுதாய்?'' என்று மெதுவாகச் சிரித்தபடியே சமாதானப்படுத்தினேன். அவன் அதை ஆமோதிக்கவில்லை போலும் – நீண்ட பெருமூச்செறிந்தான்.

பிறகு – நானே வியக்கத்தக்க ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது...தினகுவின் அழகிய வதனத்தைப் பற்றிக்கொண்டு அவன் கண்ணீரைத் துடைத்தவாறே, "அப்படியே மறந்தாலும், போகிருள் தினகு! உனக்கு நான் இருக்கிறேன்! என்னைப் பார்த்தால் பாட்டி மாதிரி இருந்தாலும் அம்மா

பச்சோந்தி

பெண்கள் தங்கள் உடைகள் என்ன கலரில்இருக்கின்றனவோ அந்தக்கலரில் மாற்றிக்கொள்ளத் தக்க விசேஷ மூக்குக் கண்ணுடி 'பிரேம்' லண்டன் மூக்குக்கண்ணுடிக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது.

வென்றே நினைத்துக் கொள்! இந்த வீடும் தோட்டமும் அழகாயில்லையா?'' என்றேன்!

தினகு அப்படியே மூர்ச்சித்துவிட்டான்!

8

நான் சுப்புவிடம் சென்றேன்.

"சுப்பு! தோட்டத்திலுள்ள குப்பைகளை அகற்ற ஒரு கைவண்டியிருந்தால் நல்லதுதான் — அன்று தினகு செய்தானே; அதைப்போல!''

சுப்பு வாயைப் பிளந்து கொண்டு நின்றுன். என் புதிய தோற்றம் அவனைத் தடுமாறச் செய்துவிட்டது போலும்! ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள்ளாக நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். என் நடையில்தான் எத்தனை வேகம்!

"நமது குழந்தைகள் பட்டுப் பூச்சிகள் போல நமது தோட்டத்தில் பறந்தோடி விளையாடுவதைக் கண் குளிரப் பார்க்கலாம்!'' என்று என் கணவர் அன்று கூறியது பலித்துவிட்டதுபோல் எனக்குத் தோன்றியது. நானடைந்த புதிய மகிழ்ச்சி என்னையும் ஒரு புதிய 'மனுஷி'யாக்கிவிட்டது!

நமக்குள்ளே

சுகி

3

உலகத்தில் மனிதன் இறப்பதற்கு எத்தனையோ வழிகளைக் கையாளுகிறான். புதுமைப்பித்தன் இறப்பதற்கு இந்த வழிகளை யெல்லாம் கையாளவில்லை; அவர் எழுதினார்!

— விந்தன்

* * *

பின்வருவது ரஸிக உள்ளம் படைத்த பிரபல எழுத்தாளர் ஒருவர் எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கடிதம்.

"அன்புள்ள இளம் எழுத்தாளர் 'சுகி' அவர்களுக்கு!

தங்கள் கையெழுத்துப் பிரதி கிடைத்தது; என் அபிப்பிராயங்கள் கேட்டது பற்றி மிக்க மகிழ்ச்சி. கதாநாயகியை மிகவும் பால்யத்திலே கொலைசெய்து விட்டீர்கள்; பாராட்டுகிறேன். மலைமீது ஏற்றிக்கொண்டு போய்க்கீழே உருட்டிவிடாமல் மலையடிவாரத்திலே உள்ள மடுவில் தள்ளி இருந்தால் நாலு பக்கம் மிச்சம். எட்டாவது பக்கத்தில் உள்ள......ஐந்து புள்ளிகளும் கதையிலே சிகரமாக இருக்கின்றன. தாங்கள் சொல்லாமல் விட்ட இப்பகுதியே மலையைவிட மிகவும் உயர்ந்தது. இன்னும் நாலைந்து புள்ளிகளைத் தாங்கள் போட்டிருந்தால் கதையிலே இன்னும் உயர்வு இருக்கும். தாங்கள் இரு வாக்கியங்களுக்கு ஊடாக வைத்துள்ள முற்றுப் புள்ளிகள், பிரபல பாடகியின்...சாந்துப் பொட்டுப் போல கவர்ச்சிகரமாக இருக்கின்றன. ஆச்சரியக் குறிகள் இல்லாமல் எழுதியிருப்பதே ஆச்சரியம்! 9-ம் பக்கம் 4-வது வரியில் 'நடுத்தெருவில் பிரஸன்னமானாள்' என்ற இடத்தில் 'பிரஸவமானாள்' என்றிருப்பதை எந்தப் பெண்மணியும் ஆட்சேபணை செய்யலாம். இவ்வளவு உயரிய கதையிலே, பாரா பிரித்துள்ள அழகை எந்தத் தமிழாசிரியரும் பாராட்டக் கூடிய முறையில் அமைத்திருக்கிறீர்கள். சுருங்கச் சொன்னால், இந்தக் கதையை வெளியிடக் கூடிய பத்திரிகை கி. பி. 2000-த்தில் தோன்றினால் அது நீங்கள் செய்த பாக்கியம்.

இங்ஙனம்

....

சிலர் வாழ்க்கையை உணர்வதில்லை; உணர்ந்தவர்களுக்குள் சிலர் சொல்லுவதில்லை; சொல்லுபவர்களுக்குள் சிலர் சரியாகச் சொல்லுவதில்லை; சரியாகச் சொல்லுபவர்களுக்குள் ஒரு சிலரே கவர்ச்சிகரமாகச் சொல்லுகிறார்கள்; அதுவே இலக்கியம்.

* * *

இன்று எல்லோரும் அழுகிறார்கள்; ஒருவருக்காவது வாழ்வில் நிம்மதியில்லை; சந்தோஷமாவது உண்டா என்றால் அதுவுமில்லை.

ஆனால் அந்த நாளில் இருந்ததை விட, இன்று மனித ஜாதிக்கு இருக்கும் சௌகரியங்கள் சொல்லுக்கடங்கா; இன்பச் சாதனங்களோ கொள்ளை மலிவு. அனுகூலங்கள் பல இருந்தும் மனிதன் அழுகிறான். முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ளுகிறான். தற்கொலை செய்துகொள்ளவும் தயங்குவதில்லை. நாகரிகத்தின் சாதனம் மனிதன் மற்ற பொருள்களைவிட உயிரைத் திரணமாக மதிக்கும்படி தூண்டிவிட்டது!

பொழுதுபோக்குச் சாதனங்கள் பல இருக்கின்றன. இவை நமக்குத் தெரியும். விளையாட்டுகளும், விநோதங்களும் இதற்குள் அடக்கம். சினிமா, டிராமா, காட்சிகள், பந்தய விளையாட்டுக்கள் ஆகியவற்றுள் பொழுதைத் திணிப்பவர்கள் நம்மில் பலர். சீட்டுக்கட்டுக்குள்ளேயே சகல இன்பங்களைக் காண்பவர்களும் நமக்குள்ளாக இருக்கின்றார்கள். இப்படி எத்தனை எத்தனையோ!

ஈடு இணையற்ற பொழுதுபோக்கு

தோட்ட வேலையில் ஈடுபடும் பெரிய பெரிய ஆத்மாக்களும் உளர். பிறருக்குப் பொழுது போக்காகவும் தங்களுக்குப் பொழுது போக்காகவும் இன்றையப் பிரமுக உலகம் பிரசங்கத்தை அணைத்துக்கொள்கிறது! இன்பத்திற்கு அடிப்படையான பொழுது போக்குகள் எல்லாமே உயர்வானவை. பிறர் மனம் துன்பம் அடையாமல் தான் இன்பம் அனுபவிக்கும் பொழுது போக்கே உயர்ந்தது. இந்த இன்பம், தோட்டக்கலையில் இருக்கிறதா? நெல்லுக்கு நீர் பாய்ச்சும்போது புல்லைப் பொசுக்குகிறோம். தொழில் என்ற கட்டுப்பாட்டுக்குள் இதில் தவறில்லை. பொழுது போக்கு என்ற கண்கொண்டு பார்த்தால் இது தவறு என்பது என் கட்சி.

விளையாட்டுகளிலும், கட்சிகளுக்குள் மண்டையுடைவதும், கால் முழங்கால் சில்லுகள் தெறிப்பதும், ஹாக்கியில் கால், அரைக்கால் ஆவதும் துன்

வாழைக்காயும் முட்டைக்கோஸும்

பத்திற்குரிய காட்சிகள். அங்கே இன்பம் விளைந்தாலும், ஒரு சில துன்பங்களுக்கு மத்தியிலே இன்பம் — முள்ளில் ரோஜா மாதிரி.

பொழுது போக்கில் எவ்விதக் குறையும் புண்படுதலுமின்றி, உயரிய முறையில் இன்பம் தருவன புத்தகங்கள். புத்தகங்களை இன்பத்திற்காகப் பயன்படுத்துவது என்பது நம்மில் எல்லோராலும் முடியாது. இது மிகவும் உன்னதமான பொழுதுபோக்கு. இதற்கு ஈடுமில்லை இணையுமில்லை. வீட்டுக்குள் இருந்தபடியே வெயில் மழை பனி என்ற உத்பாதங்களுக்குள் அகப்படாதபடி நாம் இன்பங் காண்கிறோம். நண்பர்களின் தொல்லைக்கும் கூச்சலுக்கும் ஆளாகாதபடி நாம் பொழுதுபோக்குவதில் தனி இன்பம் இருக்கிறது.

இந்தப் பொழுதுபோக்கு கவிதையில்தான் அதிகம். இலக்கிய இன்பத்தின் சிகரம் கவிதை. இந்த இன்பத்தின் சுகம் காணாத மனித ஜன்மங்களும் இருக்கத்தான் செய்கின்றன. நான் சந்தித்த அறிஞர்களில் ஒரு சிலருக்குக் கவிதை வேப்பங்காய்; ஏதோ கௌரவத்திற்காகப் பற்றுள்ளவர்கள் போன்று காட்டிக் கொள்வாரும் உண்டு. கவிதையை அனுபவிக்கப் பல அனுபவங்கள், அதோடு இணைந்த காட்சிகள் மனதில் நிற்கவேண்டும். இயற்கையை ஊன்றிப் பார்க்காத மனிதனால் கவிதையை அவ்வளவாக ரஸிக்க முடியாது. செமண்டு நாகரிகத்திற்குள்ளாக வளர்ந்து விட்டு, தோப்பையும் துரவையும் காணாத ஜீவன் கவிதையை ரஸிப்பதென்பது வெண்டைக்காயிலிருந்து வெண்ணெய் திரட்டுவது போலத்தான்.

இயற்கையின் ஓவியந்தானே கவிதை. இயற்கையைச் செழிப்பிலும், செறிவிலும் பார்க்க வேண்டும். பட்சி ஜாலங்களின் வர்ணக் குழப்பங்களையும், குரலிசைக் கேளிக்கைகளையும் பார்த்தும் கேட்டும் ரஸிக்கலாம்.

* * *

தன் பாக்களிலே நெருப்பின் ஜ்வாலையைப் புகுத்துகிறவன் கவி; அப்படியில்லாத பாக்களை நெருப்பிலே போடுகிறவனும் கவி.

* * *

மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரைப் பற்றிப் பாடுவது கவிதை; கற்பனை வாய்ந்தது. முன்னாளில் வயிற்றுக்குப் பயன்படாத, ஆனால் மென்மையும் அழகும் நிறைந்த பொருள்

களைப் பாடினார்கள், புல்லையும் பூவையும் பற்றிப் பாடினார்கள்; உழவின சிறப்பைப் பாடினார்கள்; இப்போதோ உழுதலைப் பற்றிப் பாடுகிறார்கள்; உரத்தைப்பற்றிப் பாடுகிறார்கள்; முட்டைக்கோஸ் வாழைக்காய் என்ற பொருள்களைப் பாடுகிறார்கள். தாமரையையும், காதலையும் பாடுவதைவிடக் காய்கறிகளைப் பாடுவதில் தவறென்ன? இது நல்ல கேள்வி. ஐயா, வாழைக்காய், முட்டைக்கோஸ் 'ருசி' பார்த்துவிடலாம்; ஆனால் தாமரையின் அழகை, மென்மையை ருசி பார்க்கத் தனி மனிதனால் — கற்பனை இல்லாதவனால் முடியாது. சிருஷ்டிப் பொருள்களுள் புலலிலும் பூவிலும் அழகு ருசி இருக்கிறது என்பதைத்தான் கவிதைகள் உணர்த்துகின்றன. உருளைக்கிழங்கு பஜ்ஜியைப் பற்றிய பாடல் என்னதான் உயர்வாக இருந்தாலும் அது பஜ்ஜியைப் புசிப்பதை விட, ருசியாக இருக்கமுடியாது. ஆனால் உணவுக்கு அப்பாற்பட்ட பொருள்களான மல்லிகை, முல்லை போன்ற பூக்களின் 'கவிதை ருசி' அதன் உண்மை மணத்தைவிட நமது புலனுக்கும் கவர்ச்சி தருகின்றது.

* * *

கலையின் அடிப்படை அன்பு; அன்பில்லாதவர்கள் கலைஞர்களாக இருக்க முடியாது. கலைஞன் ஏழையாக இருக்கலாம். அவன் விலை மதிப்பற்ற செல்வம்.

வாழ்வு முறைபற்றிய நோக்கங்கள் மாறுபட்டால் தவிர, இன்பங்களில் திளைக்க முடியாது. இக்காலத்திய வாழ்க்கைத் தத்துவம் அவனவனுடைய வருமானமான வைட்மின் 'ப' இருக்கிறதே அதையே பொறுத்தது பணம் சம்பாதிக்கும் திறமையோ, அதிர்ஷ்டமோ, பாரம்பர்யத்தின் சௌகரியமோ இவை இன்றைய வாழ்வில் பெரிதாக எண்ணப்படுகின்றன. இந்தப் பணத்திற்கும் அப்பால், வாழ்க்கை வாழவே என்ற மிருக தத்துவத்திற்கும் அப்பால் சில பண்புகள் இருக்க வேண்டும். வாழவேண்டுமென்ற எண்ணத்துக்கும அப்பால் வருங்கால மக்களுக்கும் சமூகத்திற்கும் சேவை செய்ய வேண்டுமென்ற ஓர் உணர்ச்சி இருந்தால் மனிதப் பிறவி பூர்த்தியாகும். சேவைக்கு ஆளாகுபவர்கள் தங்கள் வாழ்வைச் செவ்வையாக, உயர்வாக அனுபவிக்க முடியாது. இதனால் தான் கலைஞர்கள் பணத்தை மறப்பதனால் தங்கள் வாழ்க்

பாடகியின் சாந்துப்பொட்டுப் போல



“ஏண்ணே, ரொம்ப வருத்தமா உக்காந்திருக்கே?”

“ஹூம்! நாளைக்கு என்னை விடுதலை செய்யப் போறாங்களாம்!”

கையை இழக்கிறார்கள்; சமூகம் பயன் அடைகிறது.

* * *

ஆசைக்கும் ஆர்வத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. தொழிலுக்கும் கலைக்கும் உள்ள வேறுபாடுகள் இந்த ஆசைக்கும் ஆர்வத்திற்கும் பொருந்தும்.

* * *

எல்லோரும் உடல் உழைப்பை செய்வதும், எல்லோரும் மூளை உழைப்பைச் செய்வதும் ஒரு நாட்டிலே முடியாத காரியங்கள். ஒவ்வொருவர் செய்கிற காரியமும் தன்னைத் தவிரப் பிறருக்கும் பயனாக இருக்கவேண்டும். நான் ஒரு பொருள் — முள்ளங்கி—பயிரிடுகிறேன். என் தேவைக்கு மேலானதைப் பிறருக்குக் கொடுத்துவிடக் கடமைப்பட்டவன். என் உழைப்பின்ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளுகிறேன். இந்த நாளில் எவை மிகச் சுலபமாக பணந்தரத் தக்கனவோ அங்கே ஒரே கும்பல் — அதாவது பொருளை உற்பத்தி செய்வதை விட, வியாபாரம் செய்வது லாபந்தரக் கூடியதாக இருக்கிறது. இது தற்கால அமைப்பின் விசித்திரங்களில் ஒன்று. விளைவிப்பவன், வாங்குபவன், முதலாளி என்ற மூன்று பிரிவினராக இருக்கிறோம். ஒருவருக்காவது மற்ற இரு பேர்களைப்பற்றிய சிந்தனை கிடையாது. கூட்டுறவு முறையிலே வாங்குபவனுக்கும், முதலாளிக்கும் ஒரு தொடர்பு; கிராமங்களிலே முதலாளிக்கும் விளைவிப்பவனுக்கும் ஒரு தொடர்பு. இந்த மூன்று பேருக்கும் தொந்தம் ஏற்பட்டால், சமூகத்தில் பிணைப்பு ஏற்படும். அரசியல் முறையில் மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்ததே தவிர, வியாபார உலகில் சுதந்திரம் இல்லை; எதேச்சாதிகாரம்தான் இருக்கிறது.

இது தொழிலாளர்கள் உலகம்; தொழிலாளர்கள் சார்பாகச் சிந்தனையாளர்கள் வருகிற உலகம். உபாத்தியாயர் ஒருவர், தொழிலாளியை விட எலும்புக் கூடாக இருந்தால் அவரது சம்பளம் தொழிலாளியின் வருமானத்தைவிடக் குறைவாக இருந்தால் அது நாட்டின் சீர்கேட்டையே குறிக்கும். மூளை வேலை செய்வது வெளிப்பார்வைக்குத் தெரியாது; அதனால் அதிக சௌகரியங்கள் அவருக்

குத் தேவை; ஓய்வும் அதிகம் தேவை. எதற்காக? தொழிலாளர்கள் நலனையும், வசதியையும் அதிகப்படுத்துவதற்காக. தன்னலத்தைப் பாதுகாக்க வழி தெரியாது, பிறர் நலம் பேணும் உள்ளுணர்ச்சி உள்ளவர்களே, சமூகத்திற்கு என்றும் தொண்டு செய்வார்கள். இவர்களே விஞ்ஞானி, கலைஞன், அரசியல்வாதி, தொழிற்சாலை நிபுணன், சமூகத் தொண்டன் ஆகியோர். இவர்களுடைய தரம் குறையக்குறைய வருங்காலத்திய மக்கள் வாழ்வு சிறப்படைவது கடினம்.

இன்றைய வாழ்க்கை முறையில் வேலைக்கும் அதன் பலனுக்கும் சம்பந்தம் இல்லை. பணம் போட்டவன் குறி, அதிக வேலை; குறைந்த கூலி; தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு குறி பொருள் உற்பத்தியல்ல; கூலி உற்பத்தி. தொழிலாளி என்ன நோக்கத்தோடு வேலை பார்க்கிறானோ, அப்பொருளுக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை; முதலாளி என்ன நோக்கத்தோடு வேலை வாங்குகிறானோ, அவனுக்கும் தொழிலாளிக்கும் சம்பந்தம் இல்லை.

இதுதான் இன்றைய உலகம். இந்த இரண்டு சாராருக்கும் நடுவிலே, இரு சாராருக்குமுள்ள, உடல்வலு, பணவலு இரண்டுமற்ற தலைவர்கள் தங்கள் சிந்தனை வலுவால் அவதிப்படுகிறார்கள். இருவரையும் இணைக்கத் தூது போகிறார்கள். இந்தத் தூது மனித சமூகத்தின் தொடர்கதை.

Telegram: PUNTCOMPANY
Telephone: 55085

பண்ட் & கம்பெனி
(ESTD : 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சாண்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY
CHROME LEATHER WORKS
170, BOADWAY, G. T. MADRAS.

வைராக்கியம்

எஸ். நடராசன்

" சீதா "

" இதோ வந்துட்டேன் ஸார்... " என்ற குரல் டாக்டர் சந்திரனின் செவிகளில் விழுந்து மறைவதற்குள், நர்ஸ் சீதா உள்ளே ஓடி வந்தாள்.

" சீதா, இன்று கேஸ்கள் ரொம்பவும் அதிகம் இல்லையா?"

" ஆமாம் ஸார். நீங்கள் மறந்தாலும், இந்தச் சென்னை நகர் வாசிகள் உங்களை மறக்க மாட்டார்கள் போலிருக்கிறது." என்றாள் புன்னகை ததும்ப. டாக்டரும் புன்முறுவல் பூத்தார்.

" ஆனாலும் எனக்கென்னவோ கவலை தான் "

" என்ன டாக்டர் கவலை ?"

" மனிதன் என்றால் கவலை இல்லாமலிருக்குமா ?"

" உங்களுக்குமா கவலை..."

" இல்லாமலென்ன ? நல்லவர்கள், சந்தோஷமாயிருப்பவர்கள், நண்பர்கள் யாராவது நம் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்களா?"

" நோயாளிகளுக்குத் தானே நர்ஸிங் ஹோம் வைத்திருக்கிறோம். ஏதாவது காய்ச்சல், தலை வலி என்றால் தேடிவருவார்கள். சௌக்கியமாக இருந்தால்..."

" என்னைக் காண ஆஸ்பத்திரிக்கு வரவே பயப்படுகிறார்கள். நமக்கு இந்த ஊரில் புது வாடிக்கையும் இல்லை. எல்லாம் ஐந்து வருஷத்திற்கு முன்பு வைத்தியம் பார்க்க வந்தவர்கள் தாம். இன்னும் விசுவாசம் மறக்காமல் வந்து கொண்டேயிருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு மறுபடியும் சிரித்தார். சீதாவுக்குத் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

டாக்டரும் நர்ஸும் டிரஸ்ஸிங் ரூமில் சிரித்துக் கொண்டிருப்பதை யாரும் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் அதற்கு என்ன வெல்லாமோ பட்டஞ் சூட்டி விடுவார்கள். உண்மையில் டாக்டர் சந்திரனும், சீதாவும், இன்று நேற்று இவ்வாறு பேசிக் கொண்டிருக்கவில்லை. ஐந்து வருடங்களாக இருவரும் மனமொத்து, 'சந்திரா நர்ஸிங் ஹோம்' வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள். டாக்டரைவிட நர்ஸ் சீதாவுக்கு இதில் அதிகப் பங்கு உண்டு. சீதா வருவதற்கு முன் டாக்டர் வேலை நேரங்களில் சிறுகதை எழுதிக் கொண்டிருப்பார். நோயாளிகள் ஒருவர் கூட வருவதில்லை. ஈயாவது ஓட்டிக் கொண்டிருக்கலாமென்றாலும், ஆஸ்பத்திரி மருந்து வாடைக்கு ஈக்களும் மொய்ப்பதில்லை.

இவ்வாறு மிகவும் கஷ்டமான நிலையில் டாக்டர் தவிக்கும் போது சீதா அனாதையாக வந்தாள். அப்போது அவளிடம் எஞ்சியிருந்த சொத்து ஒரே ஒரு பைக்கட்டு தான். அதில் இரண்டு மூன்று புடவைகளும்,

சீலிட்டு மறைத்த கவரில் ஒரு சர்டிபிகேட்டும் இருந்தன. அனுதைக்கு அனுதை துணையாக அமைந்தாள். அண்ணன் தங்கை உறவு அவர்களிடம் வளர்ந்தது. சீதா வந்த நாள் முதல் ஆஸ்பத்திரியிலும் கூட்டம் பெருக ஆரம்பித்தது. டாக்டரின் வருமானமும் பெருகிக் கொண்டே வந்தது. இவ்விதம் ஐந்து ஆண்டுகள் மறைந்து விட்டன.

சீதா உண்பது, உடுப்பது, உறங்குவது எல்லாம் டாக்டர் வீட்டில்தான். மற்றும் வேலைக்காரி ஒருத்தி இருந்தாள். அவளே சமையற்காரியாகவும் இருந்து விட்டதால் இவர்கள் சிரமம் வெகுவாகக் குறைந்து விட்டது. சந்திரன், சீதா இருவரும் ஆஸ்பத்திரிக்குச் செல்வார்கள். ஆஸ்பத்திரி தவறினல் வீடு; இல்லை, எங்கு சென்றாலும் யாரும் தனியாகச் செல்வதில்லை. பார்ப்பவர்களுக்குப் பொறாமை உண்டாகும்படி இருவர் மனமும் ஒன்றுபட்டு, ஆஸ்பத்திரி வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து வந்தனர். அன்று இரண்டொரு ஆப்பரேஷன் கேஸ்களைக் கவனிக்க வேண்டியிருந்ததால் இருவருக்கும் ஓய்வு இல்லை. சரியாக மாலை ஏழு மணிக்கு டாக்டர் கைகழுவினுர். சீதாவும் வேறு ஆடை மாற்றிக் கொண்டு வந்தாள். இருவரும் காப்பி சாப்பிட்டுவிட்டு மீண்டும் தங்கள் பேச்சைத் துவங்கினர்.

"சீதா...!"

"என்ன டாக்டர்?"

"நம் வருமானம் அதிகரித்து விட்டது. அது போல் வயதும் அதிகரித்துக் கொண்டே போகிறது. நாமிருவரும் இப்படியே இருப்பது எனக்கென்னமோ சங்கடமாயிருக்கிறது"

"ஏன் நீங்கள் ஒரு கலியாணம் செய்து கொள்ளுங்களேன்..?"

"நான் மட்டுமா? நம் இருவருக்கும் ஒன்றுகக் கலியாணம் நடக்க வேண்டும். ஒரே நாளில், ஒரே இடத்தில்!"

"டாக்டர், அது நடவாத காரியம். மேலும் சட்டத்துக்கு விரோதம்."

"ஏன் நடக்காது? எது சட்ட விரோதம்?" சந்திரன் தொனியில் ஆத்திரம் ஒலித்தது.

"என் திருமணம் சட்ட விரோதம்."

"ஏன்......விளங்கச் சொல் சீதா"

"நான் விதவை" சீதாவின் தலைகவிழ்ந்தது.

"பூ, இவ்வளவு தானு? விதவை மணஞ் செய்துகொள்ளுவதை இன்று பண்டார சந்நிதிகள் கூடத் தடுப்பதில்லை. நீ மட்டும் சம்மதித்தால்..."

"டாக்டர், நான் ஒரு நர்ஸ் என்பதை மறந்து விட்டீர்களா?"

"நர்ஸாக இருந்தாலென்ன? நர்ஸுகள் மனித ஜாதியைச் சேர்ந்தவர்களில்லையா?"

"டாக்டர், நர்ஸுகள் கலியா யாணம் செய்து கொண்டால் அந்த வேலை பார்க்கத் தகுதியற்றவர்களாகி விடுவார்கள்."

"சீதா, உன் பேச்சில் அர்த்தமே இல்லை."

"ஆகட்டும். என் விருப்பப்படி நடந்து கொள்ளச் சம்மதிப்பீர்களா...?" என்று கொஞ்சம் பாவனையில் சீதா பேசினாள்.

"உன் விருப்பத்திற்கு எதிராக இதுவரை நான் நடந்துண்டா?"

"இல்லை"

"பிறகு என் சந்தேகம்? சீதா, உன் மனதிலுள்ளதை மறைக்காமல் சொல்."

"சென்ற வாரம் வெள்ளிக்கிழமை ... ஆஸ்பத்திரியை அடைக்கப் போகும்போது ஒரு கேஸ் வந்ததல்லவா?"

"ஆமாம். ஒரு 'பிளேயர்' மண்டையைப் பிளந்துகொண்டு வந்திருந்தார்."

"அவரை..."

"அந்தச் சாம்பியனையே மணந்து கொள்ளப் போகிறாயா?"

"அதெல்லாம் இல்லை. முதலில் அவரை எப்படியும் குணப்படுத்த வேண்டும். இரவில் நானே நேரில் கவனிக்க வேண்டும்."

"உனக்காக என் படிப்பு பூராவையும் பிரயோகிக்கிறேன், போதுமா?"

"தாங்யூ...டாக்டர்" என்று சொல்லிக் கொண்டே சீதா, அந்த வாலிபன் படுத்திருந்த கட்டிலை நோக்கி ஓடினாள். சிகரட் புகையை ஊதிக்கொண்டு, அவள் போன திசையையே சந்திரன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அமரன் கல்லூரி மாணவன். இண்டர் காலேஜ் டோர்ன்மெண்டில் ஹாக்கிப் போட்டி விளையாடும்போது பந்து அவன் மண்டையைப் பிளந்து விட்டது. காயத்தின் மேலே மறுபடியும் ஹாக்கிக் கம்பு அழுத்தமாகப் பட்டு விட்டதால் மயக்கமுற்று விழுந்து விட்டான். பிளவு பட்ட உச்சி மண்டையில் இரத்தம் உறைந்திருந்ததானது, கூர்மையில்லாத கத்தியைக் கொண்டு கீறப்பட்ட வாழைக்காயில் துருப் படிந்து காணப்படுவது போல இருந்தது. முதலுதவி செய்து படுக்கையில் போட்டார்கள்.



அமரன் நர்ஸிங் ஹோமுக்கு வந்து ஒரு வாரம் ஆயிற்று. இன்னும் காயம் ஆறவில்லை. கடுமையான காய்ச்சல்! சதா புலம்பிக் கொண்டுவேறு கிடந்தான். எத்தனையோ நோயாளிகளைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன சீதாவின் கண்களில் பட்ட அந்தக் கல்லூரி மாணவனின் முகம் மட்டும் ஏதோ ஒரு இன்சக்ஷன் செலுத்தியது போல, அவள் மனதிலே ஒரு சிறு பிரளயத்தை உண்டு பண்ணி விட்டது. அன்றுமுதல் அவள் பூரணமாக மாறிவிட்டாள்.

அவன் முகம் இரத்தஞ் சுண்டிப்போய்க் காட்சியளித்தாலும் அதையும், அவளை மறந்து ரசித்தாள். அமரனின் உடலமைப்பு அவ்வாறு அமைந்திருந்தது. சந்திரனுக்குக்கூட உள்ளூறப் பொறாமைதான். "சனியன், இவ்வளவு அழகாவனன் எதற்காக 'மேட்ச்' ஆடவேண்டும்? சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாலும், எத்தனையோ பேர்களுடைய கண்களுக்காவது குளிர்ச்சியாக இருக்கும்" என்று தலையிலடித்துககொண்டார்.

காயம் பாதிக்கு மேல் ஆறி விட்டது. ஆனால் அமரனின் உடலில் வலுவில்லை. சந்திரனும், சீதாவும் இரவும் பகலும் கண்விழித்து அவனைப் பராமரித்து வந்தனர். சீதா ஏதோ புதையல் பெற்றெடுத்தவளைப்

போல, பூரிப்போடு காணப்பட்டாள். அமைதியே உருக்கொண்டிருக்கும் சீதாவின் அகத்திலே இப்போது படர்ந்திருந்த மலர்ச்சியானது அவளை ஒரு அழகுச்சிலையாக உருக்கி வார்த்தது. இளமை ததும்பும் கண்கள்; இன்முறுவல் ததும்பும் வ்தனம்; கண்ணாடி போன்ற கன்னங்கள்; சிவந்த மேனியில் வெள்ளை நிற உடையணிந்து வெளி வரும் போது, நோயாளிகளும் தலையைத் தூக்கிப் பார்ப்பார்கள். அத்தனை சௌந்தர்ய தேவதையாகச் சீதா இருந்தாள்.

அமரன் அவள் கண்ணுக்குள் அடங்கி அழகுருவமாக வந்தான். எடுப்பான தேகக்கட்டு; பரந்த மார்பு; கவர்ச்சி ததும்பும் முகம். உடல் அசௌகரியமுற்றுத் துவண்டு கிடந்தாலும், பார்த்துக் கொண்டேயிருக்கத் தூண்டும் பருவம். அவன் மேல் அவளையறியாமல் பதிந்து விட்ட எண்ணத்தைச் சீதா திரும்பவும் மீட்க விரும்பவில்லை; முடியவில்லை. அமரனும் சீதாவோடு அடித்தொனியில் உருகி உருகிப் பேசினான். சீதாவின் நினைவும், அமரனின் சிந்தனையும் ஏக காலத்தில் ஒரே வினவை எழுப்பிக் கொண்டிருந்தன. நம் வாழ்வு மணம் பெறுமா — இக்கேள்வி ஆழ இதயத்திலிருந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் இருவரும் வெளிப்படையாகப் பேசிக் கொண்டார்கள். இருவரும் மணந்து கொள்வதென்ற முடிவும் செய்து கொண்டார்கள். அதே சமயம் டாக்டர் சந்திரனும் சீதாவின் திருமணத்தை முதலிலேயே முடித்து விடத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு...ஒரு நாள் இரவு பனிரண்டு மணியிருக்கும். டாக்டர் பங்களாவில் இருந்தார். சீதா ஆஸ்பத்திரியிலிருந்து தலைவிரி கோலமாக ஓடி வந்தாள். கண்கள் இரத்தச் சிவப்பேறி இருந்தன. அழுது அழுது தொண்டை வரண்டு போயிருந்தது. கன்னங்களில் கண்ணீர் வெள்ளம் வழிந்து சென்ற கறை படிந்திருந்தது. சந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"சீதா...என், என்ன?" என்று பரிதாபமாகக் கேட்டார் டாக்டர்.

"டாக்டர்... அவர் ... இறந்து விட்டார்' என்ற வார்த்தைகள் விம்மலுக்கும், விக்கலுக்குமிடையில் தெறித்தன. "ஐயோ சீதா" என்றலறிய வண்ணம் காரை எடுத்துக் கொண்டு டாக்டர் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றார்.

ஆஸ்பத்திரியில் எல்லா நோயாளிகளும் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வார்டர்களும், வாட்ச்மேன் உள்பட அனைவரும் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அமரன் அதே படுக்கையில் கிடந்தான். அவன் வாய் வழியே இன்னும் கருநிறமான இரத்தம் இலேசாகக் கசிந்து கொண்டிருந்தது. டாக்டர் உடலைப் பரி

சோதித்துப் பார்த்தார். உயிர் பிரிந்து சுமார் அரை மணி நேரம் இருக்கும் என்று தெரிந்தது. சுற்று முற்றும் பார்த்தும், சந்தேகப் படக்கூடிய பொருளோ அல்லது மருந்துப் பாட்டில்களோ காணப்படவில்லை. அருகிலிருந்த அலமாரியில்பன்ரொட்டியும், இரண்டு ஆரஞ்சுப் பழங்களும், இரவுசாப்பிடுவதற்கு ஒரு வேளை மருந்தும் இருந்தன. அமரனை அப்புறப் படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் சோர்வுடன் பங்களாவிற்குத் திரும்பினர்.

"ஏன் சார், ஸ்ட்ரைக் வரதுக்குள்ளே, ஊரு போய்ச் சேர்ந்திருவமா?"

வேலைக்காரி வாசலில் நின்று கொண்டிருந்தாள். சீதாவைக் காணோம். பங்களாவில் ஒவ்வொரு அறையாக நுழைந்து தேடினர். தெரியவில்லை. கடைசியில் பழய தட்டுமுட்டுச் சாமான்கள் போட்டுவைத்துள்ள அறையைத் திறந்து பார்த்தார். கதவைத் திறக்க முடியவில்லை. உள்பக்கமாகத் தாழ்ப்பாள் இடப்பட்டிருந்தது. பலவந்தமாகக் கதவை உடைத்து உள்ளே சென்ற சந்திரன் சீதாவின் பிணத்தைத் தான் பார்க்க முடிந்தது. அவள் வாய் வழியேயும் கருநிறம் கலந்த இரத்தத்துளிகள் தென்பட்டன.

சீதாவின் கரத்திலே ஒரு சீசா காணப்பட்டது. அதில் 'விஷம்' என்று கொட்டை எழுத்திலே காணப்பட்ட வார்த்தை அவரைப் பார்த்துப் பயங்கரமாய் நகைத்தது. பக்கத்திலே தூசிபடிந்து, மூன்று கால்களோடு ஊசலாடி நின்ற மேஜையின் மேல் ஒரு சிறு காகிதத் துணுக்கு அனாதையாகக் கிடந்தது. கடிதத்தைப் படிக்க விடாமல் நீர்த்திரை அவர் கண்களில் படர்ந்தது,

"என் வாழ்க்கையில் திடீரென்று தோன்றிய ஒளி, திடீரென்று மறைந்து விட வேண்டும்? சீதா, இன்னும் நான் உயிரோடிருக்கிறேனே?"

என்ற டாக்டரின் கதறல், அதன் எதிரொலி அந்த அறையையே ஒரு உலுப்பு உலுப்பின.

அமரன் — சீதா மரணம் சாதாரணமானதல்ல, பயங்கரமானது. சீதா அவனை மனதாரக் காதலித்தும், அவளே விஷங் கொடுத்து அவனைக் கொன்றுவிட்டாள். டாக்டர் சந்திரனால் கூட இதை நம்ப முடியவில்லை. எப்படி நம்ப முடியும்? ஐந்து ஆண்டுகள் இணைபிரியாது பழகியவரல்லவா? ஆனால் அவள் கைப்பட எழுதிய கடிதம் அப்ரூவராக நின்று சாட்சியமளிக்கும் போது, நாமும் இதை மட்டுமல்ல இன்னும் அவளுடைய சிதைந்த வாழ்வையும், நொறுங்கிய உள்ளத்தையும், அங்கே கோர நர்த்தனமாடி நிற்கும் பயங்கரமான வைராக்கியத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மனித உள்ளத்தில் இரு பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பகுதியை நெடு நாளைய நட்பு, இடையறாத பழக்கம் மூலம் உணர்ந்து கொள்ளலாம். சாதாரண நிகழ்ச்சிச் சரங்களால் தொடுக்கப்படும் கருத்து மாலைகள் அவ்விடத்தில் பதிவாகி நிற்கும். மற்றொரு பகுதியைப் பிறர் புரிந்து கொள்வது ரொம்பவும் கடினம். இதயத்திற்கும் எண்ணத்திற்கும் கொஞ்சமும் சம்பந்தமே இல்லாது அடிப்பரப்பில் எரிமலைக் குழம்பு போலத் தீர்க்கமான முடிவுகளும், பைத்தியக்காரச் சிந்தனைகளும் படிந்து கிடக்கும். ஒன்றுக்கொன்று மோதுதல் சாதாரணமாக ஏற்படுவதில்லை. மோதுதல் ஏற்பட்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதை எந்த உடற்கூறு அறிஞர்களும் இதுவரை முன் கூட்டிக் கணித்ததே கிடையாது. சீதாவின் உள்ளத்தில் எழுந்த போராட்டமே அவளைக் கொலைகாரியாக்கிவிட்டது. அவள் உள்ளத்தின் ஆழத்திலே புதைந்திருந்த எண்ணந்தான் என்ன? டாக்டரின் சந்திரனின் மூளை குழம்பியது.

●

டாக்டர் சந்திரனின் ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு முன் சீதா சர்க்கார் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. மனதுக்குப் பிடித்த தன் கணவருடன் மிகவும் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தாள். திடீரென்று அவள் கணவர் நோய்வாய்ப்பட்டு எலும்புக்கூடாக உருகிப் போய்விட்டார். சீதா ஆஸ்பத்திரியில் தன் மேற்பார்வையிலே பார்த்து வரும் போது, அவள் செய்த கைத்தவறினால் மருந்துக்குப் பதிலாக விஷமருந்தை அருந்தி அவள் கணவர் இறந்துவிட்டார். சீதா அழுதாள்; அலறினாள்; கதறினாள். அப்போது அவள் மனதிலே பைத்தியக்கார எண்ணங்கள் பல மலர்ந்தன. அன்று முதல் தெருவில்

யாராவது ஒரு அழகுள்ள ஆடவனைக்கண்டால், சீதாவின் கண்ணிமைகள் துடிப்பதை நிறுத்திவிடும்; பேயுள்ளம் குமுறியெழும். அந்த அழகான ஆடவனை எப்படியும் கொன்றுவிட வேண்டுமென்ற மனப்பான்மை அவள் உள்மனதில் துடித்துக் கொண்டிருக்கும். இவ்வாறு அவளையுமறியாமல் உள்ளத்தில் ஓர் கொலைகாரியாக உருமாறிக் கொண்டு வந்தாள். நாளாவட்டத்தில் பழிவாங்கும் எண்ணத்தைத் தன் மனதைவிட்டு அவளால் கல்லியெறியவே முடியவில்லை. அகற்றமுடியாத அளவுக்கு அது பயங்கரமாக வளர்ந்துவிட்டது.

இடைக்காலத்தில் மனம் சிறிது அமைதி பெறவே டாக்டர் சந்திரனைச் சரணடைந்தாள். அன்பு, ஆதரவு இவைகளுக்கு மத்தியில் ஐந்து வருடங்கள் இன்பமாக ஓடிவிட்டன. ஆனால் அமரன்? அவள் இதயக் குகையிலே உறங்கிக் கிடந்த வெறியை மீண்டும் தூண்டிவிட்டான். நெருப்பை மறைத்து நின்ற நீறு பறந்துவிட்டது.

கடந்த ஒரு வாரமாக மனத்தோடு போராடிக் கொண்டேயிருந்தாள். வெறியைத் தணிக்க அவளால் முடியவில்லை. இறுதியில் இருவரும் அதற்கே இரையானார்கள்.

சந்திரனின் கையிலிருந்த கடிதம் நழுவியது. அதிற் காணப்பட்ட வாசகங்கள் இவைதாம்:

“டாக்டர், ஐந்து வருடங்களுக்கு முன் என் கணவர் ஒப்புயர்வற்ற அழகர், என் கரத்தால் மடிந்தார். அப்போது என் மனதில் ஏனோ ஒரு பயங்கர வைராக்கியம் உருவாகியது. எங்கெங்கு அழகுள்ள ஆண்மகனைப் பார்த்தாலும் நான் பொறுக்கமாட்டேன். என் கணவருக்கு மேலாக, சமமாக உள்ள எந்த அழகுள்ள ஆடவனும் என் கண்ணிற்பட்ட பிறகு உயிரோடு உலவ முடியாது. அமரன் மட்டும் உயிரோடிருக்க முடியுமா? அழகனாயிருந்தான். அதனால் தான் கொன்றேன். இந்தச் சித்தாந்தம் உங்களுக்கு விளங்காவிட்டால் ஏதாவதொரு மனோதத்துவ சாஸ்திரியைக் கேளுங்கள். அமரனோடு பழைய சீதாவும் அழிந்துவிட்டாள். ஆனால் புதிய சீதாவை உலகம் பூரிப்போடு ஏற்குமா? வாழ்ந்து என்ன பயன்? மிஞ்சியிருக்கும் நஞ்சுத் துளிகள் என் கதையையும் முடிக்கட்டும்! வணக்கம்.”

— சீதா.

போட்டி

ஹாலந்தில் சில வியாபாரிகளுக்குள் பலத்த போட்டா போட்டி! ஒரு கடைக்காரர் அணாவுக்கு ஒரு புல்சூட் வீதம் விற்றார். அதற்குப் போட்டியாக ஒரு பள்ளிச் சிறுமியை முத்தமிடுபவருக்கு ஒரு புல்சூட் வீதம் இன்னொரு கடைக்காரர் கொடுத்தாராம்.

பொழுது போக்கு

பாகவதர் படுத்தும் பாடு!

"யாகாவாராயினும் நாகாக்க; காவாக்கால் சோகாப்பர்......" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இந்தக் குறளின் உண்மையை எடுத்துக்காட்டும் முறையில்தான் எனெஸ்கேயின் "மணமகள்" உருவாக்கப்பட்டு இப்பொழுது தமிழ்நாடெங்கும் சக்கைப்போடு போட்டுக்கொண்டிருக்கிறது. "காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது குறளில். ஆத்திரத்தால், அளவுக்கு மீறிய படபடப்பால் நாகாக்கத் தவறிய கதாநாயகி குமாரியும், கதாநாயகன் சந்திரனும் கொடியோன் பாகவதனால் 'சொல்லிழுக்குப்பட்டு' அதற்குமேல் அடியும், உதையும் பட்டுத் துன்பத்தை அடைகின்றார்கள். லண்டன் வரைக்கும் போய்ப் பாரிஸ்டர் படிப்பெல்லாம் முடித்துவிட்டு வரும் சந்திரன் வள்ளுவருடைய குறளையும் படித்திருந்தால் அவனுக்குத்தான் இத்தனை துன்பம், வேதனை, ஏமாற்றம் எல்லாம் ஏற்பட்டிருக்குமா?

அமைதியான ஒரு குடும்பம்! தந்தையும் மகளும் சௌக்கியமாகவே இருக்கின்றனர். செல்வப் புதல்வி குமாரியும், அவள் அத்தான் சந்திரனும் காதலர்கள்! இந்தக் குடும்பத்தில் ஒரு பாகவதர் நுழைகிறார். மாசு மருவற்ற இளங்காதலர்களின் உள்ளங்களிலே புயலை ஏற்படுத்திவிடுகிறார். அப்பாவி கணக்கப்பிள்ளையின் உள்ளத்திலே வேதனைத் தீயை மூட்டிவிடுகிறார். ஒரு ஏழை விதவையின் தூய்மையைக் கெடுத்து அவள் வயிற்றிலே ஒரு குழந்தையை உண்டாக்கி விடுகிறார்! தொண்டர் மெய்கண்டாரின் மண்டையைக் குண்டாந்தடியால் பிளந்துவிடுகிறார்! கடைசியில் துப்பாக்கியைக் கூடத் தூக்கிவிடுகிறார். அப்பப்பா! அவர் செய்யும் அட்டகாசங்கள், கொடுமைகள்.. இவ்வளவும் ஒரு பாகவதரா செய்கிறார் என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! ஆனால் பாகவதர்தான் இத்தனைத் தொல்லைகளையும் கொடுக்கிறார். போய் 'மணமகளை'ப் பாருங்கள்! அந்தப் பாகவதர் யார் என்று தெரிந்தால் நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். "ஆஹா! இவரா? இவர் இதுவும் செய்வார். இதற்கு மேலும் செய்வார்" என்று ஆமோதிப்பீர்கள். டி. எஸ். பாலையாதான் அந்தப் பாகவதர்! 'மணமகளி'ல் வில்லன் பாலையா

பாகவதராக வந்து வெளுத்து வாங்குகிருர்! நிஜமாகவே கதாநாயகன் சகஸ்ரநாமத்தோடு (சந்திரன்) ஒரு கட்டத்தில் மல்யுத்தம் செய்து அவரையும் 'வெளு வெளு' என்று வெளுத்து விடுகிருர்! 'மணமகளி'ன்வெற்றியில் பாலையா பாகவதருக்குக் கட்டாயம் ஐம்பது பெர்சண்ட் கொடுத்துவிட வேண்டும்! மீதி ஐம்பதுபெர்சண்டை மற்றவர்கட்குப் பகிர்ந்து கொடுத்துவிடலாம்.

கதை நீண்ட கதைதான்! நெடுநேரம் படம் ஓடுகிறது! ஆனல் உங்களுக்கு நேரம் போவதே தெரியாது!

வள்ளுவர் அனதை ஆஸ்ரமத்து 'வாத்தியார்' மெப்கண்டாராக என். எஸ். கிருஷ்ணன் வருகிருர். அடிக்கடி நம்மை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் அவர், இந்தப் படத்தில் நம்மை அழவைத்து விடுகிருர். குழந்தை அழகிரி இறக்கும் கட்டத்தில் என். எஸ். கே. யின் சோக நடிப்பு அபாரம்! அற்புதம்! அவர் தாம் ஒரு குணசித்திர நடிகர் என்ற தகுதியையும் தன் திறமையினுல் அடைந்துவிடுகிருர்!

அவரது 'ஐம்பதும் அறுபதும்' என்ற நாடகம் படத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது! முழு வெற்றி என்று சொல்ல முடியாது. ரேடியோவில் கேட்டு அனுபவித்து ரசித்த மாதிரியில் அமையவில்லை என்றே கூற வேண்டியிருக்கிறது.

அத்தர் வியாபாரி வாதனக டி. எஸ். துரைராஜ் வருகிருர். அவருடைய வேஷமும், 'ரொமான்சும்' ரொம்பப் பிரமாதம் போங்கள்! 'ஆனு விலாசம் தானப்பா' என்ற பாட்டை அவருக்குக் கொடுத்துப் பாடச் சொல்லியிருக்க வேண்டிய அவசியமே இல்லை! அவர் மட்டில் அது ஒரே குறைதான்!

மற்றும் சகஸ்ரநாமம், ஆழ்வார் குப்புசாமி, டி. பாலசுப்ரமணியம், புளிமூட்டை ராமசாமி, சி. ஆர். பாண்டியன் முதலானேர் தங்கள் பாகத்தைக் கச்சிதமாக நடித்துவிட்டுப் போகிருர்கள்! அப்பழுக்கில்லாத அவர்கள் நடிப்பு படத்தின் தரத்தை உயர்த்துகிறது.

இப்படத்தில்தான் லலிதா-பத்மினிகளின் நடிப்பு, அதிலும் பத்மினியின் நடிப்பு மிக மிகப் போற்றத்தகுந்த முறையில் அமைந்து விட்டதென்று சொல்லலாம்! "சபாஷ், லல்லி-பப்பி" என்ற அப்ளாசை நிச்சயம் பொதுமக்களிடம் பெறுவார்கள்!

கதை வசனம் மு. கருணநிதி என்ருலே போதும்; காதை மூடிக்கொண்டு படம் வெற்றி என்று சொல்லி விடலாம்; எளிமையாகவும் இனிமையாகவும் அவர் 'மணமகளு'க்கு அமைத்திருக்கும் வசனங்களைக் கேட்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள். அவருடைய வசனங்கள் வளர்ச்சிபெறுகின்றன.

'உடுமலை'யின் பாடல்கள் படத்தின் உயிரோட்டமாக ஓடுகின்றன. ஆரம்பத்தில் பாடப்படும் ஆஸ்ரமப் பாடல் ஒன்றும், 'இன்பமயம்' என்ற சங்கீதமும் மிக அருமை! 'ஐம்பதும் அறுபதும்' பாடல்களும் நன்றாக இருக்கின்றன; காது குளிரக் கேட்கலாம்!

காமிராமேனைப் பற்றி அவசியம் குறிப்பிட்டாக வேண்டும்! நீர்வீழ்ச்சிக் காட்சிகளைப் படம் எடுத்திருக்கும் முறை மிகச் சிறப்பாக இருக்கிறது. படம் முடியும்வரைக்கும் அவர் நம் நினைவிலிருந்து கொண்டே இருக்கிறார்.

கடைசியாக டைரக்டரைப் பற்றிச் சொல்ல வேண்டியது தான் பாக்கி! என். எஸ். கிருஷ்ணன் டைரக்ட் செய்த முதல் படம் 'மணமகள்' என்றுதான் எண்ணுகிறோம்! ஒரு நகைச்சுவை நடிகர் தான் டைரக்ட் செய்யும் முதல் படத்திலேயே திறமை மிக்க டைரக்டர் என்ற பெயரையும் பெருமையையும் பெறுகிறார் என்று சொன்னால் 'வெறும் புகழ்ச்சி' என்றுதான் யாரும் நினைப்பார்கள்! ஆனால் எண்பதுக்கு மேற்பட்ட படங்களில் நடித்த அனுபவம் அவருக்கு இருக்கிறதல்லவா? இந்தப் படம் அவருக்குக் 'குணசித்திர நகைச்சுவை நடிக டைரக்டர்' என்ற பெயரை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

படத்தில் விஜயாவும் பாலையாவும் ஆடும் ஆங்கில மோஸ்தர் நடனமும் பாடும் 'இங்கிலீஷ் நோட்'டும் அனாவசியமானவை! அதனை நீக்கிப் படத்தின் நீளத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம். இதைப் போலத்தான் 'ஆனா விலாசந்தானப்பா'வும்!

மொத்தத்தில் 'மணமகள்' நன்றாயிருக்கிறது. ஒரு தடவைக்கு மூன்று தடவை பார்க்கலாம்! எனெஸ்கே பிலிம்ஸாருக்கும் எனெஸ்கேயுக்கும் இதுபெரும் வெற்றியேதான்!

'பாகவதர் படுத்தும் பாடு'—இதன் விரிவை நீங்கள் திரையில் 'மணமகளை'க் கண்டுதான் முழுமையும் ரசிக்க முடியும்.

— குருவி

அழகான கேசத்திற்கு
பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்
உபயோகிக்கவும்.
RATHOD TRADING CO. SOWCARPET MADRAS. 1

விளக்குக் குறி

எம். கே. கோமேதகவேலு

அந்தி நேரம் முடிந்து இருள் மெதுவாக நுழைந்து கொண்டிருந்தது. ஷாங்காய்ப் பட்டினத்து எல்லையில் அங்நகரின் வனப்புக்கு அணி செய்வது போல ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றங் கரையில் இருவர் தனித்து நின்றுகொண்டிருந்தனர். விம் இளைஞன். நல்ல உடற்கட்டு உடையவன். அவனருகிலே அவன் தந்தை நின்றுகொண்டு ஒரு சில நல்லுரைகளைக் கூறிக் கொண்டிருந்தார்.

"விம்! நம் நகரில் அயல் நாட்டைச் சேர்ந்த நாரீமணிகள் இருக்கிறார்கள். அவர்கள் சொகுசான சாகசக்காரிகள். அந்தமானென்ன விழிகொண்ட மாதரின் அழகில் மயங்கிக் காமத்தினால் கருத்தை யிழந்து விடாதே! அவர்கள் கண்வலை சுழித்தோடும் இந்த ஆற்றை விடப் பயங்கரமானது! அதில் நீ சிக்கி விடாதே! விழிப்பாயிரு!" என்று கிழவர் மகனை எச்சரித்தார்.

விம் இதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவில்லை. சுழித்தோடும் நீரையே இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். கிழவர் சொல்லுகிறார் என்பதற்காக, அவன் தன் உயிருக்கு மேலாக நேசித்து வரும் காதலியை அவள் அந்நிய நாட்டைச் சேர்ந்தவள் என்பதற்காக மறந்துவிடத் துணிவானா? கிழவர் வயதானவர் என்ற உரிமையினால் உபதேசித்தார். விம் தந்தையின் பேச்சைத் தட்ட மனமில்லாமல் ஒப்புக்குத் தலையசைத்தான். இருவரும் நதிக்கரையிலிருந்து வீடு திரும்பினர்.

விம் பருவ வாயிலுக்குள் நுழையும் பக்குவத்திலிருந்தான். பாப்பி அந்நிய நாட்டிலிருந்து வந்தவள்—அவளுக்கு உற்றார் உறவினர் என்று சொல்லிக்கொள்ள யாரும் இடையாது. அப்படி யிருந்தும் அவள் அழகிற்கு விம் அடிமையானான். அவளை மனப்பூர்வமாகக் காதலித்தான். பாப்பியும் அவனுடன் மனமுவந்து பழகினாள். அவன் அழைத்துச் செல்லும் இடங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்க உடன்சென்று வந்தாள். இருவர் வீடும் எதிரெதிரே அமைந்திருந்ததால் விம் தன் ஜன்னலோரமாக உட்கார்ந்துகொண்டு பாப்பி அறைக்குள் செய்துகொண்டிருக்கும் ஒவ்வொரு செயலையும் எடைபோட்டுக் கொண்டிருப்பான். நாள் முழுதும் பாப்பியைப் பார்த்துக்கொண்டிருப்பதென்றால் அவனுக்கு ஒரு தனி

மகிழ்ச்சி, காந்தசக்தி வாய்ந்த பாப்பியின் கட்டழகு அவனைப் பித்தனுக்கிற்று. அவளுடைய ஒவ்வொரு அங்கமும் அழகின் எல்லையாக அவனுக்குத் தோன்றியது.

"பாப்பியே என் இன்ப ஊற்று. அவளை மணக்கும் பேறு பெற்றால் என் வாழ்வும் மலர்ந்து மணம் பெறும்" என்று அவன் உள்மனம் சதாக் கனவுகண்டு கொண்டிருந்தது. இவ்வளவுக்கும் பாப்பி விம்மைக் கடுகளவுகூடக் காதலிக்கவில்லை.

பாப்பி அவனுடன் நன்றாகப் பழகினாள். நளினமாகப் பேசினாள். அவள் விம்மைத் தன் மடிமீது கிடத்திக்கொண்டு அவன் தலைமயிரைக் கோதிவிட்டுக்கொண்டே கொஞ்சு மொழிகள் கொட்டுவதைத்தான் அவன் மறக்க முடியுமா? ஆனால் அத்தனையும் நடிப்பு என்பதுதான் அவனுக்குத் தெரியாமலிருந்து வந்தது. அதையும் விம் விரைவில் தெரிந்து கொண்டான்.

பூங்காவில் ஒரு நாள் பாப்பியும் விம்மும்குலாவிக்

கொண்டிருந்தனர். கொஞ்சலோடு கொஞ்சலாகப் பாப்பி தன் காரியத்தைத் துவக்கினுள். சிங்கார ரசத்திலே மூழ்கிக் கிடந்த விம் உண்மையை உளறி விட்டான். பாப்பியின் காரியம் வெற்றியில் முடிந்துவிட்டது.

பாப்பி அழகியாயிருந்ததோடு மிகத் திறமையுள்ளவளாகவும் விளங்கினுள். ஆடவர்கள் யாராயிருந்தாலும் அவர்களோடு சகஜமாகப்பழகுவதில்மிக்க அனுபவம் பெற்றிருந்தாள். இவளுடைய திறமையை அறிந்த சர்க்கார் பாப்பியை ஒருசில துப்புக்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்திவந்தனர். அவளும் அந்நகரில் சர்க்கார் கண்டுபிடிக்க முடியாமல் திரைமறைவில் நடந்துவந்தசூதாட்டக்கூட்டங்களைக்கண்டுபிடித்து அவைகளை எல்லாம் அம்பலப்படுத்தியிருக்கின்றுள். பாப்பி சர்க்காரின் கையாள் என நன்கறிந்திருந்தும், விம் தன் இரகசியத்தை உளறிவிட்டான். அன்று சந்தர்ப்பம் அவ்வாறு அமைந்துவிட்டது. பாப்பி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.



"விம், இவ்வளவு விலை உயர்ந்த பொருள்கள் எல்லாம் எனக்கு வாங்கித் தருகிறுயே, இதற்கெல்லாம் உன்னிடம் பணம் ஏது? என்னிடம் சொல்லக் கூடாதா?"

"பாப்பி, அந்தச் சந்தேகம் ஏன்?"

"என் விருப்பத்தைக் கேட்டேன். இஷ்டமிருந்தால் சொல்லேன்."

"உன் விருப்பமும் என் விருப்பமும் வேறு வேறு? அன்பே, உன் கேள்விக்கு மறுப்பே இல்லே. இதோ பார். நான் பணம் ஏராளமாகச் சம்பாதிக்கிறேன், நெற்றி வியர்வை நிலத்தில் ஒரு சொட்டுக் கூடச் சிந்தாமல்! சூதாடுகிறேன்; பணம் வருகிறது; என் உயிரை அலங்கரிக்கிறேன்...ஏன், என்ன திகைப்பு?"

"இல்லே யில்லே, சொல்லு விம் எங்கே சூதாட்டம் நடக்கிறது?"- பக்குவமாகக் கேட்டாள். அந்த உளவுக்காரி. விம் எஞ்சியதையும் கக்கிவிட்டான், காதல் போதையில்!

"எங்கே — என் நண்பர் ஊலிங் வீட்டில் தான் சூதாடுகிறோம்"

இவ்வாறு, இன்னும் பல சந்தர்ப்பங்களில் விம் தன் இரகசியங்கள் அனைத்தையும் அந்தப் பசப்புக்காரியிடம் கூறிவிட்டான். அவன் அவளைக் காதலித்தான். அவளும் தன்னைக் காதலிப்பதாக நம்பித் தன் இரகசியங்களைக் கொட்டினுன். இறுதியில் பாப்பியின் ஏற்பாட்டின்படி விம் சூதாடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுச்

சிறைத்தண்டனையும் பெற்று விட்டான்.

சில திங்கள் கழிந்தன. விடுதலை பெற்று வெளிவந்த லிம்மின் இதயம் பாப்பியைப் பழி வாங்க வேண்டுமென்ற ஆத்திரத்தால் குமுறியது. ஆனால் அவள் அண்ட முடியாத நெருப்பு. அரசாங்கத்தின் ஆவணைப்பில் உள்ளவள். லிம் அவளுக்குமுன் ஒரு தூசு. மற்றும் இப்பொழுது அவளோடு ஹங்க் என்றொரு முரடன் நேசமாயிருந்து வந்தான். ஹங்க்கின் நேசம் பாப்பிக்கு ஏற்பட்டபிறகு போலீஸ் அதிகாரிகள் கூட அவளை விரட்டி வேலை வாங்க நடுங்கினர்.

ஹங்க் ஒரு கொள்ளைக் கூட்டத்தின் தலைவன். பார்வைக்குப் பயங்கரமானவன். நல்ல ஆஜானுபாகுவான உருவம். சுருங்கியநெற்றி! முகத்தில் இங்குமங்கும் கத்தி வெட்டுக் காயங்களும் தழும்புகளுமே காணப்பட்டன. தலை பரட்டை. உடல் முழுவதும் காடியைப் போல ரோமம். பார்வைக்கு அழகற்றுப் பயங்கரமாகக் காட்சியளித்தாலும் ஹங்க்கைப் பாப்பி உண்மையாகவே நேசித்தாள். குடிகாரன், கொலைகாரன், அயோக்கியன் இன்னும் இந்த வகையைச் சேர்ந்த பட்டங்களே அவனுக்கு மக்கள் சூட்டிய பெயர்கள். அப்படியிருந்தும் பாப்பி ஹங்கைக் காதலித்தாள். இது விபரம் லிம் அறிந்தான். அவன் கோபத்தீயோடு பொறாமையும் கலந்து கொண்டது. எப்படியும் அவளைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நல்லதோர் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தான். இடையிடையே பழைய காதல் நினைவுகள் லிம்மின் இதயத்தில் எழும். அப்போதெல்லாம் யாழை மீட்டிக் 'காதல் சிலரிடம் தான் கருணை காட்டுகின்றது...'

என்று பாடுவான். ஜன்னல் தான் அவனுக்குப் பொழுது போக்கு மண்டபம். அங்கிருந்து பாடும்போது பாப்பியின் காதுகளில் இந்தப் பாட்டு படியட்டும் என்பது அவன் பேராசை. இப்படியே நாட்களும் நகர்ந்து கொண்டிருந்தன,

ஒரு நாள் போலீஸ் அதிகாரிகள் ஹங்க்கை எங்கும் வலை போட்டுத் தேடி வருகிறார்கள் என்ற செய்தி லிம் காதிற்கு எட்டியது. ஆனால் ஹங்க் நாள் தவறாது பாப்பியைக் காண வந்து போவதை இவன் ஜன்னலிருந்தே பார்த்து வந்திருக்கிறான். ஆகவே பாப்பி செய்த துரோகத்தைத் திருப்பிச்செய்து காட்ட லிம்மும் துணிந்து விட்டான்.

ஹங்க் ஒரு விடுதியில் ஏற்பட்ட சிறு சச்சரவின் போது தன்னை எதிர்த்தவனைக் கொலை செய்து விட்டு ஓடிவிட்டான். கொலை செய்யப்பட்டவனின் கரத்தில் கிழிந்து போன சட்டையின் ஒரு பாதி அகப்பட்டுக்கொண்டது. அந்தத் துணியின் மூலம் போலீஸார் துப்புத் துலக்கினர். கடைசியில் இந்தக் காரியம் செய்தவன் ஹங்க் என்பது ஊர்ஜிதமாகி விட்டது. எனவே எங்கும் தீவிரமாக அவனைப் புலன்விசாரித்து வந்தார்கள். பாப்பியிடமும் அதிகாரி இதைப்பற்றி விசாரிக்கையில், அவள் தனக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாதென்று சொல்லி மழுப்பிவிட்டாள். அதிகாரி பாப்பியின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்தார். ஆனால் அவள் இதற்காகப் பாடுபட்டு எப்படியும் ஹங்கை, மீண்டுமொருமுறை அவளைத் தேடி வந்தால் பிடித்துக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

பாப்பியின் மனதிலே ஒரே போராட்டம். ஹங்க் அவள் காதலன்—ஆனால் கொலைகாரன். அவனைப் பிடித்துக் கொடுக்க வேண்டுவது அவள் கடமை—அவனைக் காப்பாற்ற வேண்டுவதும் அவள் கடமைதான். ஆனால் கொலை செய்து கொள்ளையடித்து, கூத்திகளோடு சேர்ந்து கூத்தாடித் திரியும் ஒருவனைக் காப்பாற்றுவதைவிட அந்தக் கடமையைச் செய்யத் தவறுவது ஒருபோதும் குற்றமாகாது என்று கருதினாள். அதிகாரியிடம் பிடித்துத் தருவதாகவும் ஒப்புக்கொண்டாள். பாப்பியே அவருக்குத் திட்டமும் வகுத்துத் தந்தாள்.

"பாப்பி நீ யாருக்கும் பயப்பட வேண்டாம். உண்மையை மட்டும் என்னிடம் மறைக்காமல் சொல்லி விடு. தவிர நீ எவ்வளவு சீக்கிரமாகச் சொல்லுகின்றாயோ அவ்வளவுக் கவ்வளவு உனக்குத் தான் நன்மை. அந்த வெறியன் உனக்கு ஏதேனும் தீங்கு செய்ய நினைக்குமுன் அவனைப் பிடித்து விடவேண்டும்"

"ஆகட்டும் ஸார். ஆனால் நீங்கள் நான் சொல்லுகிறபடி கேட்க வேண்டும். அதோ பாருங்கள். அந்தக் கைவிளக்கை ஜன்னல் மீது வைத்தால், அந்த விளக்கின் ஒளி வீதியில் நன்றாகத்

தெரியும். நான் அந்த விளக்கு மூடியின் மேல் ஒரு சிவப்புத் துணியை வைத்து விடுகிறேன். அப்பொழுது விளக்கின் ஒளி சிவப்பாகத் தெரியும். நீங்கள் சேவகர்களுடன் தெருவில் ஒளிந்து கொண்டிருங்கள். நான் சாதுரியமாக ஹங்கிடமிருந்து கத்தியையும், துப்பாக்கியையும் வாங்கிக்கொண்ட பிறகு தான் விளக்கிலுள்ள சிவப்புத் திரையை விலக்குவேன். விளக்கு வெள்ளை நிறத்துடன் எரிய ஆரம்பித்தவுடன் நீங்கள் வந்து விட்டால்......''

"பாப்பி, இது மிகவும் நல்ல யோசனை. நீ உன் திட்டப்படி செய்துவிடு. மற்ற காரியங்களை நான் கவனித்துக் கொள்கிறேன். உன் முதல் வேலையாக எப்படியும் அவனிடமிருந்து துப்பாக்கியை அகற்றி விட வேண்டும்.'' என்று சொல்லி முடிந்ததும் அதிகாரி போய் விட்டார். பாப்பி ஒன்றும் பேசாமல் சிலை போல நின்று கொண்டிருந்தாள். அப்போது எதிர்த்த வீட்டு ஜன்னலிலிருந்து பாட்டொலி கேட்டது. லிம் தன் சங்கீதக் கருவியை மீட்டி, "காதல் சிலரிடம்தான் கருணை காட்டுகிறது'' என்று பாடிக் கொண்டிருந்தான். பாப்பியின் அறைக்குள் சற்று நேரத்திற்கு முன் நடந்த ரகளைகள் அனைத்தும் அவனுக்குத் தெரியும். சந்தோஷத்தோடு ஒன்றையும் விடாமல் கவனித்துக் கொண்டிருந்தான்.

நடு இரவு! போலீஸ் அதிகாரியும், சேவகர்களும் அந்தவீதியின் பல பாகங்களில் நின்று கொண்டிருந்தனர். அதிகாரியின் கண்கள் விளக்குக் குறியையே நோக்கிக் கொண்டிருந்தன.

ஹங் மெதுவாகப் பாப்பியின் வீட்டினுள் நுழைந்தான். பாப்பி அமைதியற்று அவனை நோக்கினாள். அவள் மனதிலே புயல். தன் காதலனின் முகத்தைப் பார்க்கப் பார்க்க அது பலமாக வீசத் தொடங்கியது. சற்று முன் கொண்டிருந்த உறுதி எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து கொண்டு வந்தது. இறுதியில் ஹங்கைக் காட்டிக் கொடுக்க அவளுக்கு மனம் வரவில்லை. அவனிடம் உண்மை பூராவும் ஒளிக்காமல் கூறினாள். அவன் பயப்படுவதற்குப் பதிலாகப் பயங்கரமாகச் சிரித்தான். அவளது பவழ அதரங்களில் முத்தங்களைப் பதித்துக் கொண்டே சிரித்தான். அவள் திகைத்தாள்.

"ஹங், நாம் தப்பிச் செல்லும் போது அந்தப் பேய்களிடம் சிக்கிக் கொண்டால், தண்டனை எனக்குத்தான் அதிகம் கிடைக்கும். ஆகவே ஏதேனும் ஆபத்து என்றால் முதலில் என்னைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடு. காதலனைக் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவனுக்காகச் சாகவும் விடாமல் அவர்கள் என்னைத் தடுத்து விடக் கூடாது'' — அவள் பேச்சில் வீரமும் தியாகமும் கலந்து வந்தன.

பாப்பி அவனை இறுக அணைத்துக் கொண்டாள். முகத்தோடு முகத்தைப் பொருத்தினாள். கன்னமும் கன்னமும் கதை

பேசிக் கொண்டன. மீண்டும் அவள் நெஞ்சில் திகைப்பு!

"ஹங்க்! கத்தியும், துப்பாக்கியும் வைத்திருக்கிறாயல்லவா?–" பதட்டத்தோடு பாப்பி கேட்டாள்.

"பாப்பி, பயப்படாதே. என்னிடம் அவை எப்போதுமிருக்கும்."—அவன் மலர்ச்சியோடு பதிலளித்தான்.

"ஹங்க், நீ இங்கேயே இரு. நான் வெளியே சென்று நாம் தப்பிச் செல்ல வேண்டிய வழியைக் கண்காணித்து விட்டு வருகிறேன்" என்று பாப்பி வெளியே வந்தாள்.

லிம் தன் ஜன்னலிலிருந்து கொண்டு அங்கு நடந்த விஷயங்களை யெல்லாம் கவனித்து வந்தான். அவன் இதுவரை அவளது வாழ்க்கைப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் விடாது படித்து வந்தவன்; அன்று சற்று நேரத்திற்குள் அந்த இரு உயிர்களையும் பிணைத்து நிற்கும் ஜீவசக்தியைக் கண்ணாரக் கண்டான். அவன் உள்ளத்திலே மீண்டும் பொறாமைத் தீ கொடிகட்டிப் பறந்தது. லிம்மின் எண்ணப்படி அவன் எதிர்பார்த்த 'பழிக்குப்பழி' நாடகத்தின் கடைசிக் கட்டம் வந்து விட்டது. அவன் யாரும் அறியாதபடி மெதுவாக, நன்கு நீட்டப்பட்ட ஒரு கம்பியைக் கொண்டு அந்த விளக்கின் மேலிருந்த சிகப்புத் துணியை நீக்கிவிட்டான். விளக்கு பிரகாசமாக வெள்ளை நிற ஒளியுடன் எரிய ஆரம்பித்தது.

விளக்குக் குறியைக் கண்ட போலீஸ் புலிகள் பாய்ந்து வந்தன. சில வினாடிகள்... ஹங்கின் முகத்திலே ஒரு சேவிச் சாயல். தப்புவதற்கு வழியில்லாதறிந்ததும் தன்னிரு கைகளையும் உயர்த்தி அவன் அதிகாரியிடம் சரணடைந்தான்.

அந்தச் சமயத்தில் அவசர அவசரமாகப் பாப்பி உள்ளே நுழைந்தாள். அவள் கண்ட காட்சி! அவள் மனம் சுக்கு நூறாக நொறுங்கிற்று. உள்ளக் கடலிலே எழுந்த கொந்தளிப்பு அலைகள் அவள் முகத்திலே தோன்றின. அழகிய அதரங்கள் அசைந்தன. ஆனால் அவைகளினின்று ஒரு வார்த்தை கூட வெளியே வரவில்லை.

பாப்பி தனக்குத் துரோகம் செய்து விட்டுக் கள்ள நடிப்பு நடிக்கிறாள் என்று ஹங்க் கருதினான். அவன் அவளைத் துரோகி என நினைத்து முறைத்துப் பார்த்தான். அவள் அந்த விளக்கைப் பார்த்தாள். அது வெண்மை ஒளியுடன் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

தன் கருத்திற் கிசைந்த காதலனை இழந்து விட்டுத் தன்னால் வஞ்சிக்கப்பட்ட லிம்மின் அருகில் நிரந்தர சித்திரவதை பட்டுக் கொண்டே வாழ அவள் விரும்பவில்லை. ஹங்கை மீண்டுமொரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். அவ்வளவு தான். மறு கணம் அவளுடல் அடியற்ற மரம் போல நிலத்தில் சாய்ந்தது.

ஜூனியர் மாபஸான்கள்!

பெட்டைக் கோழிகள் முட்டை வரம் கேட்டுநிற்பதும், சேவல்கள் பம்முவதும் பதுங்குவதும்...... அப்பப்பா! இந்தச் சாக்கடைக் கொசுக்கள் இலக்கியப் பொய்கையில் எப்படித்தான் இடம் பிடித்தனவோ தெரியவில்லை. நம் நாட்டு ரசிக சாம்பிராணிகள் தாம், இங்கே ஆபாசப் பெருச்சாளிகளை ஊட்டி வளர்த்து வருகிறார்கள் என்று சொன்னால் 'ஜுனியர் மாபஸான்கள்' குதித்துக் கொக்கரிக்கக் கூடும். ஆனால் பொழுது போக்குப் புத்தகங்கள் சிறு சிறு அளவில் பெறவேண்டுமென்பதற்காக இன்று நடமாடித் திரியும் அழுகியமுட்டைகளை எப்படித்தான் மக்கள் சுவைக்கிறார்களோ? அது அந்த ஆட்டுக் குட்டிகளுக்குத்தான் வெளிச்சம். கடற்கரை மோஹினிகள், பொன்னகரங்கள் விரைவில் கிழவிகளானால்தான் புத்தக உலகம் உருப்பட வழியேற்படும். எண்ணற்ற படைப்புகளை எழுத்தாளர்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் அநேகம் இரண்டாம் பதிப்புக் கூடக் காணமல் தூங்குவதிலிருந்தும்—கலர் விளக்குகளுக்கடியில் தொங்குவதிலிருந்தும் ஒரு உண்மையைத் தெரிந்துகொள்ளலாம். அட்டைப்படம், பகட்டுக் கலர்ப் போட்டோக்கள் இவைகளைக் காட்டியே ஏமாற்றி விடலாம் என்று எண்ணி இறும்பூதெய்தி நின்ற ஏமாளிகள் ஏமாந்து விட்டார்கள். அந்த வரிசையில் நாம் காணும் பதிப்பாசிரியர்கள்-அவர்கள் தந்த 'இலக்கியப் படைப்புகள்' — ஒன்றல்ல, இரண்டல்ல—ஓராயிரம்!

முதன்முதலாகப் 'படுக்கையறை'யைக் காண்கிறோம். இச்சிறு நூலில் அட்டைப்படம் அழகாக அமைந்திருக்கிறது. நடையில் இடையிடையே நடமாடும் நையாண்டி மொழிகள், மாபஸான் பாணிகள் அகற்றப்பட்டால் ஆசிரியரின் பெருமை பெருகலாம்.

'இன்பப் பொய்கை' நல்ல கற்பனை! ஆதி ஆதாமும், அந்தக்காலத்து ஏவாளும் மாற்றுடையில் 'ஆண்—பெண்'ணகச் சித்தரிக்கப்படுகிறார்கள். வழக்கம் போல நாகரிக ரசிகக் கண்களுக்கு நல்ல விருந்தாகவும் காட்சியளிக்கிறார்கள். அந்த அபாரக் கற்பனையின் பின்னணியிலே, இன்னொரு கதை தொடருகிறது; முடிகிறது. வாசகர்களுக்கு அதிர்ச்சியை அளிக்க வேண்டுமென்ற நினைப்போடு சிருஷ்டிக்கப்பட்ட 'திரில்ஸ்' சுபமாக முடிக்கப்படுகிறது.

'காதல் பலி'பீடத்தில் இரு ஜீவன்கள். ஒன்று டாக்டர். மற்றொன்று அழகிய கல்லூரி நங்கை. மற்றும் வசதியாக அத்தை மகள். அவள் தயவால் டாக்டர் டாக்டராக வாழுகிறார். இருவர் இதயமும் துன்புறுத்தப் படுகின்றன. அவர்கள் காதலிக்கிறார்களாம்! இடையில் கமா, செமிகோலன், பிறகு கோலன்; இறுதியில் புல்ஸ்டாப்பாக ஒரு கடிதம் வருகிறது. அதில் சில உண்மைகள்! காதல், காமம், கோபம்—கலந்த தத்துவங்கள்! பக்கங்கள் வளருகின்றன. கடைசியில்காதலியை இழந்த டாக்டர் தனியராகி நிற்கிறார், 'முற்றிற்று' என்னும் சொற்களுக்கு மேலே! இத்தகைய சுவையற்ற வாழ்க்கைப் படப்பிடிப்புகளின் மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்பது வாசகர்களின் சிந்தனைக் குரியது. அர்த்தமற்ற சொற்கள் கரடு முரடாகப் பாய்ந்து ஓடுகின்றன. பரபரவெனப் படிப்பதற்குரிய விறுவிறுப்பான நடை; பக்குவமான உரைநடை. ஒரு முறை படிக்கலாம்.

கல், மண் காணப்படாத இலக்கிய சிருஷ்டியாகக் 'கட்டுக்கரை மோஹினி'யைக் காட்ட ஆசிரியர் சிரசாசனம் செய்திருப்பது போற்றுதற்குரியது. விறுவிறுப்பாக இல்லாவிட்டாலும், இவ்வழி நாடும் இலக்கியச் சிலந்திகளால் மக்கள் எத்துணை அளவு இலக்கிய அறிவு பெறுவார்கள் என்று நமக்கு விளங்கவில்லை. இதயமென்றும், அங்கே குமுறலென்றும், எங்கேனும் சித்தரிக்க நேர்ந்தால் காதல் அல்லது தலைவிரித்தாடும் காமம் இவை இரண்டிலொன்று தான் காரணமாக அமைய வேண்டுமென்பது அட்டைப்பட ஆசிரியர்களின் விருப்பம் போலும். எனினும் கட்டுக்கரை மோஹினி படிப்பதற்கு எளியது; புதியது; பொழுது போக்க உரியது.

முல்லையின் வெண்ணிறம் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை தர, அதன் இனிய மணம் மனதிற்கும் மணம் தந்து மகிழ்விப்பது போல, 'கருப்பு முல்லை'யின் நாற்றமும் மனதைக் கவரத்தான் செய்கிறது. மெரினாவும் அவனும் அவளும் கருப்பு முல்லையின் முக்கிய உறுப்பினர்கள். மெரினாவின் பேச்சு எல்லோருக்கும் புரியும் முறையில் அமைந்திருக்கிறது. அவனும் அவளும் இருக்கிறார்கள், கனவுலக நாடக பாத்திரங்களாக. அவர்களை நனவுலகிலே சந்திக்க வேண்டுமானால் புதிய 'கற்பனை விடுதிகளை' வாசகர்கள் எழுப்பிக் கொள்ள வேண்டும் போலும். இத்தகு அவன்—அவள்களால் ஆசிரியர்கள் காம போதை ஏற்றுவதையே பேனாப் பிடித்ததின் பெரும் பயனாகக் கருதுகிறார்கள் என்ற குற்றச் சாட்டுகள் குவிந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழ்நிலத்தில் இலக்கிய வெண் முல்லைகளுக்குரிய இடத்தில் ரசிக உலகம் கருப்பு முல்லைகளையே கண்டு மகிழ

விரும்புகிறது என்பதற்கு அழகிய அட்டைப்படச்சான்ருக இந் நூல் வந்திருக்கிறது. படிப்போர், பாராட்டுவோர் குற்றம் புரிந்தவராகக் கருதப்படமாட்டார்கள். ஆனல் படிக்க விருப்பமில்லாதவர்களைப் பற்றி...நமக்குக் கவலையில்லை.

ஏதோ ஒன்றைப் பெரிதாக நினைத்து எதிர்பார்த்து, எழுப்பட்ட, நெஞ்சையள்ளும் கற்பனை நவீனமெனக் கதைத் தொடக்கத்தில் 'அஞ்சலியின் ஆசை' ஒலிபரப்பப்படுகிறது. இடையில் மாபலானும் சண்டப் பிரசண்ட மொழிகளோடு புதுமைப்பித்தனும் பவனி வருகிருர்கள். கற்பனை பழையது. எனினும் அஞ்சலியின் ஆசை சப்பென்று முடிந்து விடாமல் சுவையேற்றப் பட்டிருக்கிறது. படிப்பதற்குச் சலிப்புத் தட்டாத நடை! வேகம், விறுவிறுப்புக் குறையாத அளவில்! இன்பச் சுவைக்கு எள்ளளவும் குறைவில்லை. படிக்கலாம்.

படுக்கை அறை விலை ரூ. 1–0–0 மிஸ் மேனகா விலை ரூ. 0–8–0 ஆசிரியர் ஜெகசிற்பியன். வெண்ணிலா வெளியீடு, சென்னை–1.

காதல் பலி, அஞ்சலியின் ஆசை ஆசிரியர்: ஜெகசிற்பியன். விலை தனித்தனி ரூ. 0–8–0 டம் டம் பதிப்பகம், சென்னை–1.

இன்பப் பொய்கை விலை 0-8-0 ஜெகசிற்பியன் தீட்டியது. மனோரஞ்சிதம் காரியாலயம் சென்னை–1.

கருப்பு முல்லை விலை ரூ. 0–8–0 ஜெகசிற்பியன் வரைந்தது. தமிழ்ப் பூங்கா வெளியீடு கோவைபாரி நிலையம்—கோயம்புத்தூர்.

கடற்கரை மோஹினி விலை 0-8-0 ஜெகசிற்பியன் எழுதியது சக்திவேல் பிரசுரம்–சென்னை–1

இன்ப இரவிலே இன்பப் போதை யூட்டும் மொழிகளுக்குப் பஞ்சமில்லை. வற்ருத... அவளது அமிர்த கலசத்தை அழுத்திக்கட்டியிருந்த 'ஸாடின்' ரவுக்கை சந்திர ஒளி பட்டுப் பளபளத்தது...இது போன்ற தத்ரூபமான வர்ணனைகள். படங் காட்டும் ஒரு பருக்கைதான் இது. முற்றும் படித்துப் பார்க்கலாம்; போதை பெறலாம்.

இன்ப இரவு தீட்டியவர் ராஜகுமாரி விலை ரூ. 0–8–0 மதி நிலையம் சென்னை–1.

காலத்திற்கேற்ற அட்டைப் படமாற்றம் பெற்று 'யாருக்கு மனைவி ?' என்ற வினைவைக் கல்பனு எழுப்பியிருக்கிருர். கதை, கருத்து முற்றும் அட்டைப்பட மெழுப்பும் கற்பனைகளுக்கு முரணுக-ஆனல் அழகாக அமைந்திருக்கிறது. கசப்பான மருந்தைத் தேன் பூச்சிட்டுத் தருதல் போல, ஆபாசமான அட்டைப் படத்தோடு அற்புதமான இச்சிறு நாவலைச் சக்தி காரியாலயத்தார் தந்துள்ளார்கள். எல்லோரும் தயக்கமின்றிப் படித்து இன்புறலாம்.

'யாருக்கு மனைவி?' விலை ரூ. 0–12–0 கல்பனை தீட்டியது சக்தி காரியாலயம் சென்னை–14.

அட்டைப்படம் ஆபாசமாக அமைந்துள்ளது. கதையில் அக்குறை காணப்படவில்லை. படிப்பதற்குச் சலிப்புத் தட்டாது கதை யோட்டம் செல்கிறது. இடையிடையே ஒரு சில அதிகப்பிரசங்கித்தனமான வடமொழிச் சொற்கள் அனாவசியமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம். பரநாரி, ஸஹோதரன், க்ஷணம், பூதம் ஆவிர்பவித்து, புஷ்பாஞ்சலி போன்ற சொற்களுக்குப் பதில் இனிய தமிழ்ச் சொற்களைப் போட்டிருந்தால் ரசிகத்தன்மை குறைந்துவிடுமென்று நாம் கருதவில்லை.

மனைவியின் தோழன் விலை ரூ. 0–12–0 ஆசிரியர்: வேலவன், சக்திவேல் பிரசுரம்: சென்னை–1.

ஓட்டமும் நடையுமாகக் கதைப்போக்கை ஆசிரியர் இழுத்துக் கொண்டு போகிறார். கடற்கரையில் சில நேரம், வீட்டில் சில நினைவுகள், பிறகு நடு வீதியில் சில எண்ணங்கள் இறுதியில் ஆணுலகிற்கு ஒரு சவால் — எதிர்மறையாகப் "பெண்களே ஒழிந்து போங்கள்" என்று ஆசிரியர் அறைகூவல் விடுகிறார். தவிர்க்கக்கூடிய ஆங்கிலச் சொற்கள் அதிகம் நிறைந்துள்ளன. இருந்தாலும் அது ஒரு குறையாகத் தோன்றவில்லை.

'ஒழிக பெண்கள்' விலை அணா ஆறு. தீட்டியவர்— மதுரை மன்னன்—அன்புப் பண்ணை 13, ஓதுவார் சந்து, மதுரை.

கிடைக்கப் பெற்றோம்

வாடகை கணவன்: ஜெகசிற்பியன் எழுதியது விலை ரூ. 0–4–0 அன்பு பதிப்பகம், மதராஸ்–10.

காதலியா — காதகியா? T. B. மதிவாணன் தீட்டியது.

திராவிடம்: ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் M. A.

கேரள கீதம்: K. A. மதியழகன் தீட்டியது. வெளியிட்டோர்: பைந்தமிழ்ப்பதிப்பகம், கோவில்பட்டி.

காமமும் காதலும்: விலை அணா 4 விருதை ந. இராமசாமி தீட்டியது. கலா நிலையம், விருதுநகர்.

திண்டுக்கல்லில் தங்கப்பழம்: விலை 4 அணா. இரா. தங்கப்பழம் பேசிய தலைமை உரை. செல்வம் பதிப்பகம், வெண்கலக் கடைத் தெரு, மதுரை.

மதுரையில் மனோகரன் — விலை 4 அணா. கி. மனோகரன் ஆற்றிய சொற்பொழிவு — A. S. சிங், நியூஸ் ஏஜன்ட், நாகர்கோவில்.

ரஷ்யாவில் அறிஞர் அண்ணாதுரை விலை 4. அணா பா. கண்ணன் தீட்டியது. ஓவியப் பண்ணை, சென்னை–5

சிறுவர் அரங்கம்

தம்பி துரை—கலைச் செல்வன் எழுதியது. விலை 0–2–0 வெளியிடுவோர்: குமரன் பதிப்பகம் 7, பெத்துநாயக்கன் தெரு சென்னை–1.

அதிர்ஷ்டம் விலை 0–1–0 எழுதியர்: தில்லைவாசி வாசந்தி விலை ரூ. 0-1-0 எழுதியது கோவிந்த கிருஷ்ணன். வெளியிடுவோர்: சுமதி வெளியீடு 78, மேல வீதி, சிதம்பரம்.

திருக்குறள் திருத்திற்று—விலை ரூ. 0-2-0. பூவண்ணன் தீட்டியது தாமரைப் பதிப்பகம், சென்னை-7

ஜிம்மி விலை 0–1–0 ஆசிரியர்: கி. மு. குருசாமி. கொள்ளைக்காரன், மலைத்தங்கை சுக்ரீவன் தீட்டியது. ஒவ்வொன்றும் விலை 1 அணா. மதி நிலையம் 21, தம்பு செட்டித் தெரு சென்னை–1.

செல்லாத ரூபாய் ரூ. விலை 0-1-0 டார்ஜானும் புலி மனிதர்களும் விலை ரூ. 0–2–0 எழுதியது 'கிருஷ்ணசாமி' யானைக்குத் தும்பிக்கை உண்டானது ஏன்? விலை 0–2–0 ஆசிரியர்: எஸ், பாலகிருஷ்ணன். குழந்தை பிரசுரம் 403, கடைவீதி சேலம்.

—நாஞ

காகா தீப்பெட்டிகளை உபயோகியுங்கள்

ஸ்ரீ காளீஸ்வரி கலர் மேச் ஒர்க்ஸ்

சிவகாசி.

செப்டம்பர் இதழிலிருந்து 'கூட்டி'ற்கு இரண்டாவது ஆண்டு துவங்குகிறது.

இம்மாத இதழில் வழிப்போக்கன், வேலைவில்லவன், தங்கவேலர் — முதலான சீர்திருத்தச் சிற்பிகளின் எழுத்தோவியங்களும், புத்தக, சினிமா விமரிசனங்களும் வெளியாகியிருக்கின்றன.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD., at PONNI ACHAKAM, 12, Sevi Amman Koil Street, Tondiarpet, Madras—21.

இப்பொழுது எங்கும் விற்பனைக்குக் கிடைக்கும்
'பொன்னி' நல்கும் புதிய செல்வங்கள்!

உலக அரங்கில் ரூ. 1-0-0

தோழர் டி. கே. சீனிவாசன் தீட்டிய உயிரோவியம். ஒப்பற்ற சிறுகதைத் தொகுப்பு. சிந்தனைச் செல்வம்.

கடல் முத்து ரூ. 1-0-0

கிராமிய வாழ்க்கையின் இனிய படப்பிடிப்பு. நண்பர் எஸ். ஆறுமுகம் நல்கிய உன்னத கதை முத்துக் குவியல். அழகிய பதிப்பு.

நினைவுச் சின்னம் ரூ. 1-0-0

தோழர் இளமைப்பித்தனின் சிறுகதை விருந்து. கருத்தாழங் கொழிக்கும் இனிய கலைச்சின்னம்.

தபாலாபீஸ் விநோதங்கள் ரூ. 0-8-0

அன்றுடம் தபால் சாவடியில் நடக்கும் திருக்கூத்துக்களை விளக்கும் நகைச்சுவை செறிந்த கட்டுரைகள். இனிய சுவைமலிந்த ஓவியம்!

★

விவரமான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

★

பொன்னி லிமிடெட்

16, சேனியம்மன் கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை — சென்னை-21.

REGD. NO. M. 4849 PONNI

பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்

அண்ணி

தமிழ்

நேஷனல் பிக்சர்ஸ் ரிலீஸ்